பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

A/L - 89
PAPER CLASS
இரசாயனம்
திரு. சண்முகசுந்தரம்
பௌதிகவியல்
திரு. சோதிலிங்கம்
மார்ச் 13இல் ஆரம்பம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

விலை
ரூ 2.50

A/L - 89
PAPER CLASS
பொருளியல்
திரு. லோகசிங்கம்
கணக்கியல்
... மரியதாஸ்
திரு. ...த்தகம்
வர் ... தேவா
திரு. ...யல்
அளவையி...
திரு. விக்கு...
மார்ச் 14இல் ஆரம்...
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

சுடர் 4 விபவ ஞூ மாசி மீ 26 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 30 (09 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்-: 80

# கூட்டணி சம்பந்தமூர்த்தி நேற்றுச் சுட்டுக்கொலை!

## வயலுக்குச் சென்றவேளை சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 9

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிழக்கிலங்கைப் பிரமுகரும், மட்டக்களப்பு மாவட்ட சபையின் தலைவராகப் பதவி வகித்தவருமான திரு. எஸ். சம்பந்தமூர்த்தி நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செங்கலடியில் உள்ள அவரது வயலுக்குச் சென்றவேளை இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்டகால அங்கத்தவரான திரு. சம்பந்தமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் பணியாற்றி வந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடுவதற்கு இவர் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும், கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடுவதற்கு வசதியாக இவர் தமது இடத்தை விட்டுக் கொடுத்தார்.

எனினும், அவரது பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தேசியப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது.

3 வருடங்கள் பதில் கடமையாற்றிய

## பாடசாலை அதிபர்கள் நூறு பேர் நிரந்தரமாவர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ஒரே கல்விப் பிரதேசத்தில் தொடர்ந்து மூன்று வருடங்கள் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பதில் அதிபர்களிடமிருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

சபையின் முதல்அமர்வு இன்று:

## தலைநகரிலும் தெற்கிலும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று (வியாழக்கிழமை) சம்பிரதாயபூர்வமாக நடைபெறுவதை முன்னிட்டு தலைநகரிலும் தென்னிலங்கையிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நாடாளுமன்றப் பகுதியிலும், நாடாளுமன்றத்துக்குப் போகும் பிரதான பாதைவழிகளிலும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில்பொலிஸார், இராணுவத்தினருடன் விசேஷ அதிரடிப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர். (ஓ-ஐ)

முன்னாள் உபவேந்தர்

## ஸ்ரான்லி விஜேசுந்தர கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு, மார்ச் 9

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர நேற்று இனந்தெரியாத ஒரு கோஷ்டியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

கொழும்பு பல்கலைக்கழகத்தில் உள்ள 'கொலிஜ்ஹவுஸில்' (College House) வைத்து நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில் இவர் மீது இரண்டு பேர் ரிவோல்வர் மூலம் சுட்டனர்.

நான்கு பேர் கொண்ட ஒரு கோஷ்டி 'கொலிஜ்ஹவுஸை' நோக்கி வந்ததாகவும் இருவர் வெளியே நிற்க, மற்ற இருவரும் உள்ளே சென்று இவரைச் சுட்டனராம்.

பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர 1977 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராகக் கடமையாற்றிவந்தார்.

கடந்த டிசம்பர் மாதம் உப

(8 ஆம் பக்கம் பார்க்க)

கோபாலசாமி விடயம்:

## இலங்கையின் அதிருப்தி இந்தியாவுக்கு தெரிவிப்பு

தி. மு. க. எம். பி. வை. கோபாலசாமி யாழ்ப்பாணம் வந்து திரும்பியது சம்பந்தமாக இலங்கை அரசு தனது அதிருப்தியை இந்தியாவிற்குத் தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, கொழும்பில் உள்ள இந்தியப் பதில் தூதர் நிருபம் சென்னிடம் இலங்கையின் அதிருப்தியைத் தெரிவித்தார்.

யாழ் விஜயம் பற்றி திரு. கோபாலசாமி சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். எனவே அவரின் விஜயம் குறித்து இனிமேலும் சந்தேகம் எழமுடியாது என்று திரு. விஜேரத்ன தெரிவித்தார்.

திரு. கோபாலசாமியின் செயல் பொறுப்பற்ற தன்மையானது என்று முதலமைச்சர் கருணாநிதி கண்டித்திருப்பதை திரு. விஜேரத்ன வரவேற்றார்.

திரு. கோபாலசாமியின் யாழ் விஜயம் குறித்து இந்திய அதிகாரிகளும் அதிருப்தி கொண்டிருப்பதாக பதில் தூதர் நிருபம் சென், அமைச்சர் ரஞ்சனுக்குத் தெரிவித்தார். (உ-எ)

## முல்லைத்தீவுப் பகுதிகள் வழமைக்கு திரும்புகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 9

முல்லைத்திவு மாவட்டத்தில் போக்குவரத்துச் சேவைகளும் அன்றாட அலுவல்களும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவின் காட்டுப் பகுதிகளான ஆண்டான் குளம், அலம்பில், குமுழமுனைப் பகுதிகளில் இந்திய அமைதிப்படையினர் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்நடவடிக்கைகளினால் பீதியுற்ற மக்கள் அப்பகுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர்.

தற்பொழுது தாக்குதல்கள் அடங்கியுள்ளதால் அப் பகுதிகள் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-10)

## தமிழ் மொழியை அமுலாக்க அதிகாரிகள் பின்னடிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடக்கு, கிழக்கு அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் அலுவலகங்களில் நிர்வாக வேலைகளை தமிழ் மொழியில் மேற்கொள்வதற்கு அதிகாரிகள் பின்நிற்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ் மொழியை உத்தியோக மொழியாக அரசு பிரகடனப்படுத்தியுள்ள போதிலும், தமிழ் அரசு அதிகாரிகள் இது விஷயத்தில் பின்நிற்பதாகப் புகார் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது சம்பந்தமான புகார்கள் இருப்பின் மாகாணசபை உறுப்பினர் திரு. கே. ரவீந்திரன், இல, 6 மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தம்முடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஓ)

★ இரு வாரங்களில்

## ராஜீவ், கலைஞரைச் சந்திக்க ஈரோஸ் குழு இந்தியா செல்லும்

கொழும்பு, மார்ச் 9

பிரதமர் ராஜீவ்காந்தியையும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதியையும் சந்திக்க ஈரோஸ் தூதுக்குழு அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியா செல்லும்.

ஈரோஸ் மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. ஆர். சங்கர் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் மூன்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. கருணாநிதியை ஏன் சந்திக்கிறீர்கள்? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. சங்கர் சொன்னதாவது:-

தமிழர் பிரச்சினையில் திரு. கருணாநிதிக்கு முக்கியபங்கு உண்டு.

திரு. கருணாநிதியுடன் கலந்தாலோசிக்காமல் பிரதமர் காந்தி எவ்வித முடிவும் எடுப்பார் என்று நான் நினைக்கவில்லை.

அரசியல் யாப்பின் ஆறுவது திருத்தத்தை ரத்துச் செய்ய மூன்றில்இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் தேவையல்லவா? என்ற கேள்விக்கு திரு. சங்கர் சொன்னதாவது:-

அந்தப்பெரும்பான்மை கிடைக்க நாம் உதவுவோம்.

கேள்வி: அதற்காக நாடாளுமன்றத்திற்குச் செல்வீர்களா?

சங்கர்: நிச்சயமாக. நல்ல காரியங்களைச் செய்ய ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்க உதவுவோம். (உ-எ)

## இலங்கை மின்சாரம் இந்தியாவுக்கு!

கொழும்பு, மார்ச் 9

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையைத் தாம் எடுத்து வருவதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின்பேரில் இந்தியஅரசுடன் இது குறித்து அமைச்சர் பெஸ்டஸ் பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### முச்சந்தி முரளி



இங்கை கறண்டுக்கு நாங்கள் படுகிற பாட்டிலே......... உவர் சொக் அடிக்கிற நியூஸ் எல்லோ சொல்லுறர்......!

கோப்பாய், புத்தூர், நீர்வேலிப் பகுதிகளில்

## போலி மிருக வைத்தியர் உலாவுகிறர்! கவனம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 9

கோழிகளுக்கு ஊசிபோடும் போலி மிருக வைத்தியர் கோப்பாய், புத்தூர், நீர்வேலி பகுதிகளில் நடமாடி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துப் பொது மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி கால் நடை வளர்ப்போர் சங்கம் கேட்டுள்ளது.

கோழிகளுக்கு அம்மை, கொள்ளைநோய்போன்றநோய்கள் தோன்றியுள்ளதாகக் கூறி அந்தப் போலி வைத்தியர் வைத்தியம் செய்து வருகிறுராம்.

அந்த ஆசாமி தண்ணீரை ஊசி மருந்து எனச் சொல்லிக் கோழிகளுக்குச் செலுத்திப் பொது மக்களிடம் இருந்து பண ... வும் கூறப்படுகிறது.

கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டிருப்பின் அருகேயுள்ள உத்தியோகபூர்வமாக இயங்கும் சுகாதார மிருகவைத்தியரை நாடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

### சுபநேரம்

09 – 03 – 1989

மாசி– 26 வியாழக்கிழமை

சுபநேரம்:
07 – 54 முதல் 09 – 24 வரை

ராகுகாலம்:
01 –54 முதல் 03 – 24 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## சீருடையில் பொலீஸார்!

யாழ்ப்பாணம், மார்ச் 9

மேலிட உத்தரவை அடுத்து நேற்று யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் உள்ள பொலீஸார் சீருடை அணிந்து கடமைகளில் ஈடுபட்டனர். (ஓ-10)

## வீடு தீக்கிரை

கொழும்பு, மார்ச் 9

மெதிரிகிரியாவில் உள்ள முன்னாள் மாவட்ட அமைச்சர் ஏ. டி. எக்கநாயக்காவின் வீடு இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது. (உ-எ)

## பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற மோதல்

பருத்தித்துறை பஸ்நிலையத்திற்கும் சிவன் கோவிலடிக்கும் இடையில் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

தொலைபேசி வயர் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச்செய்தி எழுதப்படும் வரை ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது. (உ-160)

## 2 இன்ஸ்பெக்டர்கள் கொலை

கண்டியிலும், அளவ்வையிலும் இரண்டு பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள், தீவிரவாதிகளால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேவேளை நேற்று மட்டும் பாதுகாப்புப்படையினர் ஆறு ஜே. வி. பி. தீவிரவாதிகளைச் சுட்டுக்கொன்றதாக அறிவிக்கப்படுகிறது.

இன்று 9 ஆம் திகதி ஹர்த்தால் நாளாக அனுஷ்டிக்குமாறு தென்பகுதித் தீவிரவாதக் குழு ஒன்று சகல திணைக்களங்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-10)

## தமிழ்ப் பகுதி எம். பிக்கள் ஜனாதிபதியை சந்தித்தனர்

கொழும்பு, மார்ச் 9

நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்க் கட்சிகள், குழுக்களின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசினார்கள்.

ஈரோஸின் சுயேச்சைக் குழு சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. இளைய தம்பி பரராஜசிங்கம், திரு. எஸ். ரட்ணராஜா, ஜனப். ஷேஹு தாஹுத் பஷீர் ஆகியோரும் —

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் —

(8-ஆம் பக்கம் பார்க்க)

✶பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள்

## 15ஆம் திகதி முதல் புதிதாக விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15-ஆம் திகதி தொடக்கம், றக்கா வீதியிலுள்ள காணிப்பதிவு அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தகவல் யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்தினுல் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1987, 1988, 1989 ஜனவரி பெப்ரவரி மாதங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களைக் கையாள்வதற்கென

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொல்வினின் இடத்துக்கு வை. பி. டி.சில்வா

கொழும்பு, மார்ச் 9

ஐக்கிய சோஷலிச முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் எம். பி. யாக நியமிக்கப்பட்ட டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் இடத்திற்கு, ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா தெரிவாவார் என்று சொல்லப்பட்டது.

டாக்டர் டீ சில்வா எம். பி.யாக பதவிப்பிரமாணம் செய்யும்முன்னரே காலமானார் என்பது தெரிந்ததே. (உ-எ)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், T.V., றேடியோ, குளிர்சாதனப் பெட்டி, மேசை, கதிரை, செற்றி, Show-Case, கண்ணாடி மேசை, லாச்சி மேசை, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. சோ. நடராசா தருக்கள், வீரமாகாளி அம்மன் கோயில்வளவு, நல்லூர். (9781)

வெள்ளை நிற கன்னி ஆடு பெரிய இனம் குட்டி போடும் நிலையில்விற்பனைக்குண்டு. விலை ரூபா 3000/- தொடர்பு 887, ஆஸ்பத்திரிவீதி, சுண்டுக்குளி. (9909)

பிறிமாஇன ஒருநாட் புரொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15 - 03 – 1989 இல் விநியோகிக்கப்படும். 12 – 03 – 1989 முன் பதிவுசெய்க. 1. C.S K பாம்சென்ரர், கச்சேரியடி, 2. கிருஷ்ணா பாம் சென்ரர், திருநெல்வேலிச் சந்தி, 3. திருமகள் ஸ்ரோர்ஸ் சிவலிங்கப் புளியடி, 4Red Rose Farm வல்வெட்டித்துறை. (9782)

Honda Reconditioned புதிய பழைய Model C 90, C 70, C D 50, M D 90, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 390. மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (9791)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 8 ஆம் திகதி புதன் கிழமையும், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் 9 ஆம் திகதி வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன் கொக்குவில். (9650)

கிறிஸ்ரொம்போ புரொயிலர் குஞ்சுகள், கோல்டன் கொமெற் பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். மேல் விபரங்களுக்கு யாழ். சைனீஸ் றெஸ்ரறேன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (9913)

### அரிசி தேவை

வாரம் 200கிலோ சுத்தமான பச்சை அரிசி தேவை. தொடர்பு நோயல் டானியல் ''இரத்தின வாசா'' இருபாலை சந்தியிலிருந்து இருபாலை கிழக்கு கோப்பாய். (9916)

### பெண் நெசவாளர் தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவம் மிக்க பெண் நெசவாளர், பயிலுநர் உடன் தேவை. நேரில் வரவும். தங்குமிட வசதியுண்டு. ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்ரீஸ், வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணி. (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) (9912)

### தவறிவிட்டது

லேடீஸ் சிற்றிசன் ஓட்டோமட்டிக் கைக்கடிகாரம் (தங்க நிறம்) 3- 3- 89இல் கொக்குவிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது B. பவானந்தன் 41/32, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார்கட்டு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9789)

### தவறிவிட்டது

03 - 03 – 1989 அன்று 576650582V என்ற இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டையும், கைப்பையும், பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி செல்லும் போது பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சாந்திமதி தேவசிகாமணி ரூபவாசம், வல்வெட்டித்துறை. (9917)

### தேவை

அரைத்த மா பைக்கட் பண்ண 2பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. அனுபவ அறிவு விரும்பத்தக்கது. ஆனால் அவசியமில்லை. விண்ணப்பத்துடன் நேரில் வரவும். நோயல் டானியல், 'இரத்தின வாசா' இருபாலைச் சந்தியிலிருந்து இருபாலை கிழக்கு, கோப்பாய். (9915)

அமெரிக்கா செல்ல லொத்தர் மூலம் 'விசா' பெற விண்ணப்பங்கள் 'ரைப்' செய்து கொடுக்கப்படும். தொடர்பு: காலை 7. 00 — 8.00 மாலை 1. 00 — 7. 00. 82, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். காலை 8. 30 — 12.30 68, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (9914)

### A L Classes

A/L 89, 90, 91 விஞ்ஞான பாடங்கள் அனுபவம் முதிர்ந்த பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். B G Institute of Science 214 Palaly Road, Kanthermadam Junction Jaffna (9701)

### மகளிருக்குரிய அலங்கார மனையியல் கற்கை நெறிகள்

வழக்கமாக நடைபெறும் வகுப்புகள் உடை தைத்தல், கேக்வகை தயாரித்தல், மணமகள் உடையலங்காரம், சிகை அலங்காரம், மனை அலங்காரம் மற்றும் பல [illegible] கைநுணுக்க வேலைகள் தொடர்ந்து நடைபெறும். தொடர்பு கொள்க: நிர்வாகி, அனிற்ரா அழகியற்கலை நிலையம், பூநாரி மரத்தடி Anita School K K S Road, Kokuvil. (9919)

### TYPEWRITERS

Type writers: தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும். அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Samy & Co Shabra அருகாமையில்) (C/1362)

### ஓடருக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான (Tie) ரை எம்மிடம் கைவசம் உண்டு. ஓடருக்கும் செய்துகொடுக்கப்படும். தேவைக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். மேலும் பிரின்டிங் வேலைகளும் செய்துகொடுக்கப்படும். நியூ வசந்தா பிரின்டிங் சென்றர் 248, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (9906)

### Advanced English

தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியையிட்டு காலை 8.30– 10.00 மணி. செவ்வாய், வியாழன் நாட்களில். ஆரம்பம்: 14- 3- 89 S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (9763)

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு, ஆரம்பம்: 14-03-89 செவ்வாய், வியாழன் நாட்களில் நேரம் காலை6மணி- 7. 30 மணி S B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9762)



## கேள்விப் பத்திரங்கள் கோரல் திகதி நீடிப்பு

கமநலச் சேவைகள் திணைக்களம்
கிளிநொச்சி மாவட்டம்

### தளபாடங்கள்

### அலுவலக உபகரணங்கள்

27-02-1989ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி கேள்விப் பத்திரங்கள் தொடர்பாக, முடிவுத்திகதி 1989-03-09 ஆம் திகதிக்குப் பதிலாக

**1989-03-15 ஆம்திகதி பிற்பகல் 2-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது**
என்பதை அறியத் தருகின்றேன்.

ந. சண்முகநாதன்
- பதவி நிலை உத்தியோகத்தர்
உதவி ஆணையாளருக்காக
கமநலச் சேவைகள் திணைக்களம்
கிளிநொச்சி மாவட்டம்.

பூநகரி வீதி,
பரந்தன்.
7 - 3 - 89.

[C-1827]



## நன்றி நவிலல்

### திரு. யோ. செல்வராசா

(மட்டக்களப்பு மாநகரசபை நூலகர்)

| | |
|---|---|
| தோற்றம்: 14-11-1945 | மறைவு: 02-03-1989 |

பொலன்னறுவையில் அகால மரணமடைந்த அன்னாரின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

அரசடி
நவாலி தெற்கு,
மானிப்பாய். (9796)



## Institute of Bankers, SriLanka

**Oct --- Nov. 1989**
Classes Commencing on
**10th March, 1989**

Contact
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(C/1736)



# ஆசிரியர்கள் வெளிநாடு செல்வதற்கு கல்வி அமைச்சின் அனுமதி தேவையில்லை

### பணிப்பாளரின் கையொப்பமே போதும்

ஆசிரியர்கள் வெளிநாடு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கும் பூரண அதிகாரம் அவ்வப்பகுதி கல்விப்பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

கல்வி அமைச்சு இப்படித் தீர்மானித்தது.

இதுவரை கல்வி அமைச்சுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது. அதற்காக உதவிச் செயலாளரும் அமர்த்தப்பட்டிருந்தார்.

இனிமேல் வெளிநாடு செல்ல கல்வி அமைச்சின் அனுமதி தேவைப்படாது.

சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் மட்டும் போதுமானது.

இப்படி கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வருடாந்தம் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ஆசிரியர்கள் வரை வெளிநாடு செல்வதாக அமைச்சின் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-எ)

## வறுமை ஒழிப்புத்திட்டம் 2 பிரிவுகளாக மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச். 9

வறுமை ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுபற்றிய விளக்கப் பயிற்சி மாநாடு இரண்டு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

வறுமை ஒழிப்புத் திட்டத்தை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு 70 இணைப்பு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 35 பேருக்கு விளக்கப் பயிற்சி மாநாடு 11 ஆம் 12 ஆம் 13ஆம் திகதிகளிலும்—

ஏனைய 35 பேருக்கு 14ஆம் 15ஆம், 16 ஆம் திகதிகளிலும்- யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விளக்கப் பயிற்சிகளை நடத்துவதற்கு மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

## பழைய புத்தகங்களை விற்க அதிபர்களுக்கு அனுமதி

சகல பாடசாலைகளிலும் பயன்படுத்த முடியாத பாவித்த புத்தகங்களை விற்பனை செய்வதற்கு கல்விச் சேவைப்பகுதி அனுமதி வழங்கியுள்ளது.

சகல புத்தகங்களும் கடதாசி விலைக்கு விற்பதற்கு கேள்விக் கோரிக்கை மூலம் நடவடிக்கை எடுக்க, சகல கல்லூரி அதிபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கல்விச் சேவை வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (உ-94)

## கொள்ளை

மட்டக்களப்பு, மார்ச் 9

காத்தான்குடியில் ஒரே இரவில் 5 வீடுகளில் பணம், நகை உட்பட 3 இலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் கொள்ளையிடப்பட்டன.

ஆயுதம் தரித்தவர்களே கொள்ளையில் ஈடுபட்டனர் எனக்கூறப்பட்டது. (ஓ)

## திருட்டு

கோப்பாய் வடக்கு பிராமண ஓடைப்பகுதியில் உள்ள விளை நிலங்களில் பகல் வேளைகளில் இராசவள்ளிக்கிழங்கு, வாழைக்குலை என்பன திருடப்பட்டு வருவதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ச - 72)



## SHAMROCK ACADEMY

247, Hospital Road,
Chundikuli - Jaffna

**A/L91** நாளை ஆரம்பம்
10 – 3 – 89 காலை 6.15
(வெள்ளிக்கிழமை)

| | |
|---|---|
| BOTANY — | திரு. குகாதரன் |
| ZOOLOGY — | திரு. நாகநாதன் |
| CHEMISTRY — | திரு. தில்லைநாதன்<br>திரு. செல்வா |
| PHYSICS — | திரு. சௌந்தி |
| App/Pure Maths— | திரு. கமலசிங்கம் |

### A/L 91 கலை/வர்த்தக

வகுப்புகளும்

ஆரம்பம்: 10 3-89 3–15 p.m.

● நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[9790]





மாந்தை மேற்கு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
திருக்கேதீஸ்வரம்.

### அங்கத்தவராகச் சேர்தலும் வாக்காளர் இடாப்பினை முடிவுறுத்தலும் (31/03/1989)

1989 ஆம் முதல் கால் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு 31. 03. 1989 உடன் முடிவுறுத்தப்படும். வாக்காளர் இடாப்பில் இடம்பெற விரும்புவோர்,

31. 03, 1989 க்கு முன் ரூபா 10/- முழுப்பங்கொன்றினைச் செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

31. 03. 1989 க்குப் பின் சேரும் அங்கத்தவரெவரும் அடுத்து வரும் காலங்களுக்குட்பட்ட வாக்காளர் இடாப்பில் இடம்பெறமாட்டார்கள்.

அங்கத்தவர் விண்ணப்பப்படிவங்களை உங்கள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு உங்கள் கிளை முகாமையாளர் அல்லது பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(ஒப்பம்)
ந. சிவபாதம்,
பொது முகாமையாளர்,
மாந்தை மேற்குப் ப. நோ. கூ. சங்கம்,
திருக்கேதீஸ்வரம்.

(C/1640)





## பதவி வெற்றிடம்

### லொறிச் சாரதி பதவி

(சமயோசிதம்)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 7 தொன் டாடா பென்ஸ் லொறிச் சாரதிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 1989 – 03 - 20 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தகைமைகள்:**

01. 8ஆம் வகுப்புச் சித்தியடைந்திருக்தல் வேண்டும்.
02. 1989-03-31இல் 45 வயதிற்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.
03. ஆங்கிலம், சிங்களம் பேசத்தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
04. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி தனது கண்பார்வையில் எவ்வித கோளாறும் இல்லையென்பதை வைத்திய அத்தாட்சிப் பத்திரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
05. லொறிச் சாரதி அனுபவம்.

**சம்பளம்:**

கூ. வே. ஆணைக்குழுவின் விதிக்கமைய வழங்கப்படும்.

**பிணை:**

உரொக்கம் — ரூ. 5000/-
ஆதனம் — ரூ. 5000/-

தலைவர்,
புலோலி பல நோ. கூ. சங்கம்.

[C–1828]



## 31ஆம்நாள் நினைவஞ்சலி



### செல்லையா திருநாவுக்கரசு

(பாற் பண்ணை உரிமையாளர்)

| | |
|---|---|
| தோற்றம்: 1929 - 04 - 24 | மறைவு: 1989 - 02 - 07 |

அமரத்துவம் எய்திய எங்கள் அன்புக்குரியவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு 35, கச்சேரி ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் (09 - 03 – 89) இன்று வியாழன் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

மனைவி, பிள்ளைகள்.

35, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[9794]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுத்துறை செய்தியாளர்

விளையாட்டுத்துறை அறிவும், அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து விளையாட்டுத்துறைச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விளையாட்டுத்துறை நுணுக்கங்களை அறிந்தவராகவும், தமிழில் எழுத்தாற்றல் உள்ளவராகவும், ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் அவசியம். பகுதி நேரமாகப் பணிபுரிய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது மனுக்களை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், விளையாட்டுத்துறைச் சான்றிதழ்கள், நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்ப வேண்டும்.

**நிர்வாக இயக்குனர்,**
நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்டெட்;
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் ரகம் பிரிக்கப்பட்ட 5243 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. 15-03-89க்கு முன்னர் ரூபா 100/- கட்டி மேற்படி சங்கத்தில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 22-03-89க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம்,

**பொது முகாமையாளர்,**
**உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,**
**வல்வெட்டித்துறை.**

என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.

(C/1638)

## அறவழி பாலர் பாடசாலைத் திட்டம்

அறவழிக்குழு பாலர் பாடசாலைகளை வட - கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 25 பின்தங்கிய கிராமங்களில் நடாத்தவுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்து பாலர் பாடசாலைகளை அமைக்க விரும்பும் கிராமிய நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களை 25-03-1989க்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரியில் அனுப்பக் கோரப்படுகின்றன.

**செயலாளர்,**
**அறவழிக்குழு.**
த. பெ. இல-2
சாவகச்சேரி.

[9963]

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா செல்லத்துரை அவர்கள்

(பொன்னம்பலம் அன் சன்ஸ் உரிமையாளர் தலவாக்கொல்லை)

**மறைவு: 05 - 03 - 1984**

ஐந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பும் பண்பும் எங்கள் மனதை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
திருமதி பு. செல்லத்துரை, (தேவி)
செ. ராஜசுரேஸ், செ. சுரேஸ்ராஜா.

''புவனவாசம்''
உடுவில் - சுன்னாகம் தெற்கு.

[9958]

பனம் பொருள் உற்பத்தியை அதிகரிக்க

# கிராமங்கள் தோறும் பெண்கள் குழுக்கள்

அரியாலை, மார்ச், 9

பனம் பொருள் உற்பத்தியைஊக்குவிக்கும்பொருட்டு பனை அபிவிருத்திச் சபை கிராமப் புறங்களில் உள்ள பெண்களைக் குழுக்களாக அமைத்து அவர்களை உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக புலோலியில் பெண்கள் குழு ஒன்று (நீட்புயன்பத்தை உழைக்கும் மகளிர் நிறுவனம்) அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினருக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு நீட்புயன் பத்தை புலோலி கிழக்கில் உள்ள ''உழைக்கும் மகளிர் நிறுவன தலைமை அலுவலகத்தில்'' நடைபெற்றது.

கிராமப்புறப் பெண்களை அதிகளவில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்துவதே இவ்வாறான பெண்கள் கருத்தரங்குகளின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமம் தோறும் பெண்கள் குழுக்கள் உருவாக்கப்பட்டு இவ்வாறான கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

வடக்கு - கிழக்கில்

# முன்னோடி மதிய உணவுத் திட்டம்: அடுத்த 27 முதல் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஒரு கோப்பை பால்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தின்கீழ் வடக்கு கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கென முன்னோடி திட்டம் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதிமுதல் அமுல்படுத்தப் படவிருக்கிறது.

கல்வி அமைச்சு விவசாய காணி அமைச்சின் அனுசரணையுடன் பூரணமான மதிய உணவுத் திட்டம் இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் மேமாதம் தொடங்கும்போது நடைமுறைக்கு வரும்.

மாத இறுதியில்அமுலுக்கு வரும் முன்னோடித் திட்டத்தின்கீழ் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை பால் வழங்கப்படும்.

தமிழ்ப் பகுதிகளில் இதற்கென தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பாடசாலைகளின் விபரம் வருமாறு:-

1.யாழ் கல்விமாவட்டம்- கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்,

2, கிளிநொச்சி கல்வி மாவட்டம்- கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம்.

3. வவுனியா கல்விமாவட்டம் -பட்டாணிச்சி புளியங்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயம், மடுல்கந்தை சிங்கள மகாவித்தியாலயம்.

4. மன்னார் கல்வி மாவட்டம்- முருங்கன் மகாவித்தியாலயம்.

5. முல்லைத்தீவு கல்வி மாவட்டம் - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.

6.திருகோணமலை கல்வி மாவட்டம் - தம்பலகாமம் மகாவித்தியாலயம், முள்ளிப்பொத்தான அல்ஹிஜ்ரா மகா வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை சிங்கள வித்தியாலயம்.

7.மட்டக்களப்பு கல்வி மாவட்டம் - அலிகார் மகா வித்தியாலயம், செங்கலடி மகா வித்தியாலயம்.

8. அம்பாறை கல்வி மாவட்டம் - பொத்துவில் சிங்கள வித்தியாலயம், காரைதீவு மகா வித்தியாலயம், அல் மர்ஜான் மகா வித்தியாலயம், சம்மாந்துறை.

இது சம்பந்தமான விபரமான சுற்று நிருபம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுச் செயலாளர் ஜனாப் எம். எம். மன்சூர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார். (அ-ஐ10)


**உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்க**
உழைக்கும்போதே சிறுகச்சிறுகச் சேமியுங்கள் . . .

சேமிப்புக்கு வழிகாட்டி

★ ஷப்ரு ★

**மாதாந்த சேமிப்பு உயர் வட்டியுடன்**
உங்கள் கைகளுக்குக் கிடைக்க ''ஷப்ருவை'' நாடுங்கள்.

மாதாந்தம் ரூபா 500/- சேமித்தால் 36 மாதங்களில்
**ரூ. 23216/35 கிடைக்கும்.**

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக
12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழே உள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்

**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம் பற்றி மேலதிக தகவல்களை தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
தொழில்: ..............................

[C/5163[ கையொப்பம்


# மிளகாய் செய்கைக்கு இலவச உரம் விநியோகம்

வட்டக்கச்சி, மார்ச் 9

கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர் வாழ்வுக் கழகமும், செயர்ஸ் தாபனமும் இம்மாவட்டத்தில் மிளகாய் பயிரிடும் சிறு விவசாயிகளுக்கு இம்முறை இலவசமாக சுமார் ஏழுலட்சம் ரூபா பெறுமதியான உரத்தை பங்கீட்டு முறையில் வழங்கவுள்ளனர்.

கழகத்தின் பொருளாளர் திரு. எஸ். சிவராஜலிங்கம் கனகாம்பிகைக்குளத்தில் வைபவரீதியாக உரத்தை வழங்கி இத்திட்டத்தினை ஆரம்பித்துவைத்தார்.

கால் ஏக்கர் மிளகாய்ப் பயிரிடும் விவசாயிக்கு முக்கால் அந்தர் வீதமும் அரை ஏக்கர் பயிரிடுவோருக்கு ஒன்றரை அந்தர் வீதமும் உரம் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

புளியம் பொக்கணை, உதயநகர், இராமநாதபுரம், கரியாலை நாகபடுவான், முழங்காவில் ஆகிய இடங்களில் மிளகாய் பயிரிடும் சிறுவிவசாயிகளுக்கு இலவச உரம் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (உ-163)

## தற்கொலை

ஒட்டுசுட்டான், மார்ச் 9

முத்துஐயன் கட்டு நாலாம் கண்டத்தில் தச்சுத்தொழிலாளி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான இவர் குடும்பத் தகராறு காரணமாக நஞ்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-113)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:-
06 - 02 - 1955

● ● ●

ஆண்டவன் பறிப்பு:-
19 - 02 - 1988

திதி: 09 - 03 - 1989

### திரு. சின்னையா குணரத்தினராசா (குணம்)

ஓடி மறைந்தது ஓராண்டு மகனே!
தேடி அலைகின்றோம் தினமும் உன் ஆவியை
மூடி மறைக்க முடியாத உன் நினைவைப்
பாடி மறைக்க முயல்கின்றோம் முடியவில்லை.

''தமிழகம்''
வேளாவை,
அளவெட்டி.

பெற்றார், சகோதரர், உறவினர்கள்.

(9786)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### அம்பலவாணர் (சின்னவாணர்) கற்பகம்
(புங்குடுதீவு)

**தோற்றம்:-** 10-1-1910
**மறைவு:-** 7-2-1989

9-3-89 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்-**

16 A, அம்மன் ரோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(9787)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. அன்ரன் வழங்கும்**

மற்றும் ஒரு நற்செய்தி

ஒரு வாரத்தில் விசாவுடன்

ஜேர்மனி

இத்தாலி செய்து கொடுக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்:

**S. P. அன்ரன்**

648 1/3, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(C/1823)



## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Data Processing & Computer Programming Course**

புதிய பிரிவுகள்: 11-03-89 (Sat & Sun)

1. BASIC
   2 1/2 MONTHS — 8.00 a.m - 10.00 a.m
2. ADVANCED BASIC
   1 1/2 MONTHS — 11.00 a.m - 1.30 p.m
3. COBOL
   3 MONTHS — 10.00 a.m - 11.30 a.m (12 - 03 - 1989)

**1st Payment: Rs. 400/-**

IBM Super/XT, IBM Compatible Apple உட்பட பல நவீன Computer களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையில் 10-03-89 (3.30 p.m) இற்கு பிரிவுகள் ஆரம்பமாகும்.

**IDP Computer Centre**
**342, K. K. S. Road, JAFFNA.**

Branch: 7th Mile post. K. K. S Road, Mallagam.

[C-1810]



## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 1/2 மாதம் ஆரம்பம்: 12-03-89


(சனி, ஞாயிறு வகுப்புகள்)

கட்டணம்: ரூபா 950/- இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப் பயிற்சி (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11-03-89




**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, மின்சார நிலைய வீதி,

2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உப தபாற்கந்தோர் அருகாமை)

[C/1792]




யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் புதிய மின்விசிறி மற்றும் உபகரணங்களை கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

அதிபர் கா. கணேசதாசன் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஆகியோர் அன்பளிப்புப் பொருள்களைப் பெறுவதையும் வைபவத்தில் பங்குபற்றிய கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், முன்னைநாள் அதிபர் திருமதி க. தர்மலிங்கம், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் த. அழகரத்தினம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (இ)

# அன்பு, நீதி, ஒழுக்கம் கூடிய இளைஞர்களே எமக்கு தேவை

## ஒன்றுகூடல் விருந்துபசாரத்தில் உரை

''அன்பும் அறமும் நீதியும் ஒழுக்கமும் கூடிய இளைஞர்களே நமக்குத் தேவைப்படுகின்றனர். பாடசாலைகளில் சமயபாடத்தை பரீட்சைக்குப் படிக்கும் பாடமாகக் கருதக் கூடாது. சமுதாய நலனைச் சிந்தித்து சிறந்த ஒழுக்கமும், உயர்ந்த மனப்பாங்கும் முதியோரை மதிக்கும் நற்பண்பும் உள்ளவர்களாக மாணவர்களை வழி நடத்துவதே சமய பாடம் கற்பித்தலின் நோக்கமாக அமைய வேண்டும்''.

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையின் ஜி.சி.ஈ வகுப்பு மாணவர்களால் நடத்தப்பட்ட மதிய போசன விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வைபவம் மாணவர்தலைவன் கே. கணேசநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு எம். வேதநாதன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது.

வன்செயல்கள் பெருகி வரும் இக் காலத்தில் மாணவர்கள் இறைநம்பிக்கை உடையவர்களாகவும் தனது பாடசாலைக்கு விசுவாசம் உள்ளவர்களாகவும் தமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களை இறைவனாகக் கொள்ளும் இயல்புடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

நீங்கள் பாடசாலையை விட்டு விலகினாலும் உங்கள் பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுப்பதில் முனைய வேண்டும். உங்களின் பெருமையே இப் பாடசாலையின் உயர்ச்சிக்கு வழி கோலும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. வேதநாதன் தனது பாடசாலைக்கு புதிய மின் விசிறி ஒன்றை அதிபர் திரு. கா. கணேசதாசனிடம் கையளித்தார்.

கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. இ. அன்னலிங்கம் ஆகியோரும் சிறப்புரையாற்றினர். (இ-ச)

# விரைவில் தேர்தல்

## 308 உள்ளூராட்சி மன்றங்களுக்கு

கொழும்பு, மார்ச் 9

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் 308 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று மாகாண சபைகளுக்கான துணை அமைச்சர் ரூபாகருணாதிலக தெரிவித்தார்.

இவற்றில்— 12 மாநகர சபைகளும் 39 நகரசபைகளும் 257 பிரதேசசபைகளும் அடங்கும்.

ஏற்கனவே நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்தக்கூடியதாக உள்ளாட்சி தேர்தல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

மூன்று உள்ளூராட்சிஅமைப்புக்களின் தேர்தல்களும் ஒரே நாளில் நடத்தப்படும் என்று துணை அமைச்சர் ரூபா கருணாதிலக தெரிவித்தார். (உ-எ)

ஷப்ரு· மத்திய கல்லூரி கிரிக்கெட் போட்டி:

# வெற்றி - தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், மார்ச். 9

மத்தியகல்லூரிக்கும் ஷப்ரு அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 'ஷப்ரு' அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களை எடுத்தது.

எஸ். முருகவேள் 49, வை. ஜெயந்தன் 35, வரதன் 30, எஸ். கிளஸ்ரான் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்திய கல்லூரிசார்பில் அபாரமாக பந்துவீசி சசிதரன் 37 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினர். சதீஸ் 45 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைப் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றனர்.

சதீஸ் 66, சு. ரஞ்சித் 29, குணரெத்தினம் 26, ராஜ்குமார் 25, ஓட்டங்களைப் பெற்றனர்.

'ஷப்ரு' அணியில் பந்து வீசிய வை. ஜெயந்தன் 55. ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைப் கைப்பற்றினர். பி. சுரேஸ் 42, ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேரம் இன்மையால் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.


உங்கள் பயண அன்பர்!

**M. P. LINGAM வழங்கும்**

★ பயண ஒழுங்கு ★

கனடா! ஜேர்மனி! அமெரிக்கா!
இத்தாலி! பிரான்ஸ்!

ஆகிய நாடுகளுக்கு துரிதகெதியில் பயண ஒழுங்குகள் செய்து தருகின்றோம்.

மற்றும்

தாய்வான்! யப்பான்!

ஆகிய நாடுகளுக்கு தொழிற்சாலை ஊழியராகக் கடமையாற்ற ஆட்கள் தேவை.

மற்றும்

சவூதி, குவைத்

நாட்டுக்கு கிளினர்ஸ் ஆகக் கடமையாற்ற ஆட்கள் தேவை.

முஸ்லீம் றைவர் சவூதி நாட்டுக்குத் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்.

Saudi, Kuwait, Bahrain

ஆகிய நாடுகளுக்கு

**HOUSE MAID தேவை**

உடன் தொடர்பு கொள்ளவும்.

**M. P. LINGAM**

764, ஆஸ்பத்திரி வீதி,

(மைக்கல் றேடியோ சேவிஸ் அருகாமையில்)

யாழ்ப்பாணம்.

(9956)



# இலங்கை வங்கி

★ 50 ஆவது ஆண்டு நிறைவு வைபவங்கள் ★

# நாடளாவிய கட்டுரைப் போட்டி

இலங்கை வங்கியின் 50-ஆவது ஆண்டு நிறைவு வைபவங்களின் ஒரு அங்கமாக, இலங்கை வங்கியும் கல்வி அமைச்சும் இணைந்து, நாடளாவிய கட்டுரைப் போட்டி ஒன்றை மும்மொழிகளிலும் நடத்த உள்ளது. இதற்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு:-

1. பங்குபற்றுவோர் அரசாங்க, அல்லது அரசாங்கத்தினல் அங்கீகரிக்கப்பட்ட, பாடசாலைகளின் மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
2. 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. கட்டுரைகள் கீழ்க்கண்டவற்றில் ஒன்றைத் தலைப்பாகக் கொள்ளல் வேண்டும்.

✶ ''இரண்டாயிரமாம் ஆண்டில் இலங்கை வங்கி''
✶ ''இலங்கை வங்கி – தேசியச் சொத்து''
✶ ''இலங்கை வங்கி – அன்றும், இன்றும், நாளையும்''

4. கட்டுரையானது 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கட்டுரையாளரது சொந்தக் கையெழுத்திலும், இருத்தல் வேண்டும். ஒற்றைக் கோடிட்ட பூல்ஸ்கெப் தாளின் ஒருபக்கம் மட்டுமே பாவிக்கப்படல் வேண்டும்.
5. போட்டியாளரின் பெயர், பிறந்த திகதி, வயது என்பனவும், பாடசாலையின் பெயர், விலாசம் என்பனவும் தனியான ஒரு தாளில் தரப்பட வேண்டும். அதிற் கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்று பாடசாலை அதிபரினல் அத்தாட்சிப்படுத்தப்பட்டுக் கட்டுரையுடன் அத்தாள் இணைக்கப்பட வேண்டும்.
6. ஆக்கங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி, 1989-ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி ஆகும்.
7. ஆக்கங்கள் அக்குறிப்பிட்ட மாவட்டத்துக்கான இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளரை, 15-5-89க்கு முன்னதாகச் சென்றடைதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''இலங்கை வங்கி கட்டுரைப் போட்டி'' என்று குறிப்பிடல் வேண்டும். கொழும்பு மாவட்ட ஆக்கங்கள் எல்லாம், மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி, கொழும்பு உள்ளக மாவட்டம், யோர்க் வீதி, கொழும்பு-1, என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட மட்டத்திலே, ரூபா 250/- பெறுமதியான மூன்று பரிசுகள் மும்மொழிகட்கு வழங்கப்படும். மும்மொழிகளிலும் சிறந்த மூன்று கட்டுரைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து தேசிய மட்டத்திலான போட்டிக்குத் தகைமை பெறும் தேசிய மட்டப் போட்டியில் முறையே ரூபா 1500/-, ரூபா 1000/-, ரூபா 500/-க்கான பரிசுகளும், சான்றிதழ்களும், மும்மொழிகட்கும் வழங்கப்படும்.

போட்டி தொடர்பாக ஐம்பதாம் ஆண்டு நிறைவு வைபவக் குழுவினரது முடிவுகளே இறுதியானவை. இலங்கை வங்கி ஊழியரது பிள்ளைகள் இப்போட்டியில் பங்கேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களைப் பெற உங்கள் அருகாமையில் உள்ள இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளருடன் தொடர்பு கொள்க**

# இலங்கை வங்கி

[-1636]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பழக்கத்திலிருந்து சமுதாயத்தை மீட்க வேண்டும்

கடந்த சில காலங்களாக நம் நாட்டில் அசுரவேகத்தில் பரவி வரும் போதைப் பொருள் மோகம், எமது இளம் சந்ததியினரிடையே முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல இப் போதைப் பொருள் பாவனையிலிருந்து நம் சமுதாயத்தை மீட்க வேண்டிய கட்டாயம் நமக்குள்ளது. எனவே போதைப்பொருட்கள், அவை ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றிய அறிவு மக்களுக்கு ஊட்டப்படல் வேண்டும்.

மனிதனுல் உட்கொள்ளப் படும்போது, அவனது உடலில், மனதில், நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தி, இறுதியில் அவனை மரணவாசலுக்கு இட்டுச்செல்லக்கூடிய இரசாயனப் பொருட்களே போதைப் பொருட்களாகும். Opium (ஒப்பியம்), Marijuvana (மரிஜீவானு), Heroin. (ஹெரொயின்), Cocaine(கொகெய்ன்), L.S.D. கஞ்சா, மதுபானங்கள், அம்பெற்றமீன்கள் (Ampetamines), புகையிலை, தூக்கமாத்திரை போன்றவை இவற்றுட் சிலவற்றை பாவிக்கும் ஒரு மனிதன் நாளடைவில் இப்பொருட்களை பாவிக்காமல் வாழ முடியாது எனும் நிலைக்குத் தள்ளப்படுகின்றுன்.

போதைவஸ்துப் பாவனைக்கான காரணங்கள்;

பெற்றோர்கள், உறவினர்களிடம் இருந்த அன்பு, பாசம் மறுக்கப்படுதலே மாணவர்கள் இப்பொருட்களை நாடுதலின் அடிப்படைக் காரணம் என ஆராய்ச்சியாளர்கள் புலப்படுத்தியுள்ளார்கள். இளங்கன்று பயமறியாது என்பதற்கிணங்க பின் விளைவைச் சிந்தியாது எதற்கும் துணியும் பருவத்தில் இவர்கள் இலகுவாகப் போதைப் பொருள் விற்பனையாளர்களாலும் பாவனையாளர்களாலும் கவரப்படுகின்றனர். நண்பர்களின் தூண்டுதல் போதைவஸ்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம், மனத்தை வருத்தும் பிரச்சனைகளிலிருந்து நீங்கி, போதை தரும் புதிய உலகில் சஞ்சரிக்கும் ஆசை போன்றன இளைஞர்களின் பாவனை அதிகரிக்கக் காரணமாகின்றன.

இப்போதைப் பொருட்கள் பின்வரும் முறைகளினுலும் உள்ளெடுக்கப்படுகின்றன.

(i) வாயூடாக

நமது வர்த்தகர்களே ... எண்ணிக்கையை அதிகரிக்கு முகமாக குடிபானங்கள்/இனிப்புப் பண்டங்களில் கலப்பது உண்டு. (எனவே அறிமுகமற்றவரிடருந்து உணவுப் பொருட்களை வாங்கும் பழக்கம். பெற்ருேரால் தடுக்கப்பட வேண்டும்) மேலும் 'சுங்கான்' எனும் நீண்டகுழாய், மூலம் தூள்வடிவிலுள்ள 'ஒப்பியம்' போன்றவை உறிஞ்சி உள்ளெடுக்கப்படலாம். மாத்திரைகள் வடிவில் (Capsules) உள்ளெடுக்கப்படலாம்.

(ii)புகைபிடித்தல்மூலம்

சிகரெட், சுருட்டு போன்று சுற்றுப்பட்டு, புகை வடிவில் மூக்கினூடு உள்ளெடுக்கப் படலாம். வாய் மூலம் எடுக்கப்படுவதை விட இது துரிதமாக செயற்பட்டு மூளையை தாக்கும்.



(iii) ஊசி மூலம் ஏற்றல்


ஒரு சில விநாடிகளிலேயே விளைவைத் தரும் துரிதமுறை இது. ஒரே ஊசியைப் பலர் உபயோகிப்பதால் செங்கண்மாரி, Aids போன்ற பல நோய்கள் ஏற்படவும் இம்முறை வழி வகுக்கும்.

**'இண்டரக்ட் கழகம்'**
**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

### போதைப் பொருள் பாவனையாளர்களில் ஏற்படும் பாதிப்புகள்

பொதுவாக மூளை பாதிப்பதால் ஒருவித மயக்கநிலையை உருவாக்கும். அந் நிலையில் செய்யும் செயல்கள் யாவும் மனிதன் சுய உணர்வின்றி அறிவுக்கப்பாற்பட்ட நிலையிலேயே செய்யப்படுகிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பன இதன் பிரதான விளைவுகளாகும். மேலும் தூக்கமின்மை, பசியின்மை, முன்கோபம், சுயகவனமின்மை, விளையாட்டில் நாட்டம் குறைவு, பொய்கூறல், மனுேவியாதி, வலிப்புகள், உளவியற்சோளாறுகள் போன்றவற்றுக்கும் போதைவஸ்து பாவனையாளர்கள் ஆளாகலாம்.

போதைப் பொருட்களை உட்கொண்ட பின்னரே அல்லது அவற்றை உட்கொள்ள வேண்டுமென்ற ஆவேசத்திலோ மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தும். உடலில் இவற்றின் செறிவு கூடிய நிலையில் சுயநினைவற்ற நிலை (Coma) அல்லது சித்தப் பிரமையடைந்த நிலை ஏற்படலாம்.



ஊசி மூலம் செலுத்துதல்

### போதைப் பொருள் பாவனையை தவிர்க்க வேண்டிய கட்டாயம்

இத்தகைய கொடிய பாதிப்புகளைஏற்படுத்தும் 'போதைப் பொருள் அரக்கனின் மரணப் பிடியிலிருந்து நம் இளம் சமுதாயம் விடுதலை பெற வேண்டும். இவர்களைப் பீடித்துள்ள தாழ்வுமனப்பான்மை, பயம், உடற்சக்தி குன்றிய நிலை, சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள நிலையிலிருந்து இவர்களை மீட்ட, குடும்ப அங்கத்தவர்கள் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் போன்ருேர் பூரண ஆதரவை வழங்க வேண்டும். போதைப் பொருட்பாவனையிலிருந்து மீளவிரும்புவோரிடத்து அன்பு பாராட்டி, ஒத்துழைப்பும் ஊக்கமும் வழங்கி எந்நேரத்திலும் அவர்களுக்கு கை கொடுத்து உதவ வேண்டும். மனுேரீதியான கோளாறுகளுக்கு மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். பாவனையாளரின் சிந்தனையை, விளையாட்டு, சமூகசேவை, வேறு பயன்மிகு பொழுது போக்குகளுக்கு திசை திருப்பி, அவர் தன்னை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ளக் கற்றுக் கொடுக்க வேண்டும். இத்தகைய ஒத்துழைப்பை வழங்க முன்வரும் மக்களால் போதைவஸ்து பாவனைமூலம் மரணவாசலை நோக்கி மண்டியிட்டு நிற்கின்ற நம் இளம் சந்ததியினரை வாழவைக்க முடியும்.



சீங்கான மூலம் உள்ளெடுத்தல்

( ✶ ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்டட் நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது ✶ )

## வாசகர் மேடை

### குறுகும் பாதைகளும் குறுகிய மனங்களுமா?

கடந்த காலங்களில், யாழ்ப்பாண வீதிகள் ஒழுங்கைகளாக மாறிக் கொண்டு வருகின்றன. கடை உரிமையாளர்களின் இடம்பிடிக்கும் பேரவா, மற்றும் கடைகளுக்கு சரக்குகள் ஏற்றி இறக்கும் லொறிகளின் குறுக்கீடு, நடைபாதை வியாபாரிகளின் இடையூறு, நடுவீதியிலே நின்று ஆள் சேர்க்கும் மினிபஸ்களின் தொந்தரவு மற்றும் பல.

நகரம் இப்படியென்ருல், நகரிலிருந்து செல்லும் பெருந்தெருக்கள் மிக மோசம். யாழ்-மானிப்பாய் வீதி, கே. கே. எஸ். வீதி போன்றவற்றில் மரக்காலை மரங்கள் வீதியின் இருபுறமும் சுமார் 50 மீற்றர் நீளத்திற்கு போடப்பட்டு ஏற்கனவே சிறிதான இந்த பெருந்தெருக்களை மேலும் சிறிதாக்கிவிட்டன.

பெரிய மனது பண்ணி வீதிகளை அகலமாக்க நாம் ஒத்துழைக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கானவர் நன்மை பெற நாடு சிறக்க ஒரு சிலர் தடை போடுவது சமூக விரோதமே. இங்குவரும் வெளிநாட்டவர் இந்த வீதிகளைப் போலவே இம் மக்களின் மனங்களும் குறுகியவை (Narrow minded) என்ற முடிவிற்கு வருவார்களாஞல் அதில் ஆச்சரியமில்லை!

**R. விஜேந்திரன்**

மானிப்பாய்.

### நோயாளிகளை உதாசினம் செய்யும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் திடீரென வருத்தமுற்ருேருக்கும், விபத்துக்களில் அகப்பட்டுத் தவிக்கும் நோயாளிகளுக்கும் முதலுதவி செய்வதற்குக் கூட வைத்தியசாலையில் மருந்துகள் இல்லை.

வைத்தியசாலை ஊழியர்கள் மிகவும் உதாசீனமான முறையில் நோயாளிகளுடனும் பொது மக்களுடனும் நடந்து கொள்கிருர்கள். வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட வேண்டிய நேரங்களில் கூட உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் அங்கு இருப்பதில்லை.

இதற்குப் பல உதாரணங்களை நாம் முன் வைக்க முடியும். கடைசியாக, 06–03–89 திங்கள் இரவு 7.30 மணியளவில் கரம்பொன் கிழக்கில் நடந்த விபத்தில் காயப்பட்டோருக்கு முதலுதவி செய்த தாதிமார் மிகவும் காலதாமதம் செய்தனர். பல வேண்டாத பேச்சுக்களின் பின்னர் ஏஞே தானே என்று முதலுதவி செய்த பின்னர் நாளை மருந்து கட்டலாம் போய் வாருங்கள் என்ருர்கள்.

இவ்வித அவலநிலையில் இருந்து, ஊர்காவற்றுறை மக்களைக் காப்பாற்ற யாழ். மாவட்ட சுகாதார திணைக்களம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

— **உண்மை விரும்பி**

கரம்பொன்.

# சமயக் கோட்பாடுகளை அறிய வழி வகுத்த ராமகிருஷ்ணர்

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திவ்விய வாழ்க்கையை நாம் மனதில் கொண்டு வாழ முற்படும்போது நமக்கு பெரிய முன்னேற்றம் ஏற்படும். அவர் ஒரு எளிய அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். கதாதரன் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட இவர் சிறுபையஞக இருந்தபொழுது உபநயனச் சடங்கு நடக்க சில மாதங்களுக்கு முன்பெ தானி என்ற பிறசாதி மாதுவிடமிருந்து தான் பிஷை ஏற்பதாக வாக்குக் கொடுத்திருந்தார். பிராமண முறைப்படி பிஷை பிராமண குலத்தவரிடம் இருந்துதான் பெற வேண்டும். இந்த விடயத்தில் குடும்பத்தில் பெரிய சர்ச்சை உண்டாகியது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொடுத்த வாக்குபடியே நடந்தார்.

அவதார புருடர்கள் பொதுவாக ஏழைகளுடைய குடில்களில்தான் அவதரிப்பார்கள். இதற்குக் காரணம் ஏழைகளுடைய இல்லங்களில் உண்மை, அடக்கம், சீரிய பண்புகள் ஆகியன மிளிரும். இதன் அடிப்படையில் வாழும் புண்ணிய சீலர் மாத்திரம்தான் உலகிற்கு வழிகாட்ட முடியும். மேலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தனித்தன்மை என்னவெனில் அவரவர் இயல்புக்கு ஏற்றவாறு நெறிப்படுத்துவது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'நான் ஒன்றையும் அழிக்க வரவில்லை, அதனைப் பரிபூரணப்படுத்த வந்துள்ளேன்' என்பார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் எதனைப் போதித்தார்? உபதேசங்கள் வாயிலாகக் கற்பித்ததைவிட வாழ்வாங்கு வாழ்ந்த தம் வாழ்க்கையின் மூலமாக அவர் அதிகமாகக் கற்பித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு தனிப்பட்ட சமயக் கொள்கையைப் போதிக்கவில்லை. சமயக்கோட்பாடுகளை விரிவாகப் படிப்பதற்கு வழிவகுத்தார்.



பரமஹம்சர்

மெய்ப்பொருளே பேரறிவு, இப்பேரறிவை உலகில் உள்ள வேறுபட்ட சமயங்கள் கடவுள், அல்லா, புத்தர், சிவன், விஷ்ணு, பிரம்மா என்று பல பெயரிட்டு அழைக்கின்றன. இதுவே குணங்களுடன் கூடிய சகுணப் பிரம்மமாகவும் குணமற்ற நிர்க்குணப் பிரம்மமாகவும் உள்ளது. குணமற்ற பிரம்மம் என்னும் பொழுது குணங்களுடன் கூடிய பிரம்மத்தை விடப் பெருமை குறைந்தது என்று எண்ணலாகாது. குணமற்றது என்னும் பொழுது எல்லையற்ற குணங்களைக் கொண்டது என்று பொருள் படுகின்றது.

பூரணப் பொருள் என்ற நிலையில் மெய்ப் பொருள் அனைத்தையும் கடந்ததாகவும் பிரபஞ்சம் என்ற நிலையில் உலகில் உள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்திடமும் நெருங்கிய தொடர்புடையதாகவும் அவற்றிற்கு அடிப்படையாகவும் அமைகிறது. இக் கண்ணோட்டத்தில் பேரறிவு, இறைவன், இறைவி, தந்தை, அன்னை என்று பேசப்படுகிறது. உயிர்களும், உலகமும் இந்த தந்தை, அன்னை எனும் தெய்வீகத்தின் புறத்தோற்றங்களாகும்.

பக்தர்களுக்கு இறைவன் அன்பு வடிவமாக அமைகின்ருன். பொறுப்பற்று தன்னை மறந்திருக்கிற தன் குழந்தைகளை தன்னுடைய திருவடிகளில் இழுத்துக் கொள்வதற்காகவே இறைவன் வாழ்க்கையில் துன்பங்களைத் தருகிருன். இறைவன் அனைத்திலும் உறைகிருன். ஆயினும் பக்தர்கள் உள்ளத்தில் சிறப்பாக அவனுடைய சான்னித்தியம் உள்ளது. உள்ள முருகிக் கூறும் பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்க்கிருன். தன்னுடைய அளப்பரிய கருணையால் அவர்களுக்கு அருள் பாலிக்கிருன். ஞானத்தின் வாயிலாக நிர்க்குணப் பிரம்மத்தை அறியலாம். அன்பின் வழியாக சகுணப் பிரம்மத்தை அடையலாம். ஆனுல் பக்தி நெறியும் சரணுகதியும் எளிமையானது, இயல்பானது. பக்தி நெறியில் செல்வோருக்கும் பரமாத்மாவினின்று ஜீவாத்மா வேறுபட்டதல்ல என்ற ஞானத்தை இறைவன் நல்குகிருன். பக்தி நெறியில் தந்தை, தாய், நண்பன், குழந்தை, அன்பன் என்ற ஏதாவது ஒரு மனித உறவினை இறைவனிடம் கொள்ளலாம். பக்தனின் மனப்பான்மைக்குஏற்ப இறைவன் தன்னைப் பல வடிவங்களில் வெளிப்படுத்துகிருன்.

**சுவாமி சித்ரூபானந்தா**

### அர்ச்சுனு போட்டி முடிவுகள்

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் "அர்ச்சுனு" நடத்திய தைப்பொங்கல் பரிசுப் போட்டி ஆக்கங்கள் நடுவர் குழுவினுல் பரிசிலனை செய்யப்பட்டுமுடிந்து விட்டன.

பெறுபேறுகள் எதிர் வரும் சனிக்கிழமை (11-03-89) சஞ்சீவி இதழில் வெளிவரும்

# பலமான எதிர்க்கட்சி கொண்ட 9 ஆவது புதிய நாடாளுமன்றம்

நான் மீண்டும் நாடாளுமன்றம் செல்ல விரும்புகிறேன்.

முன்னுள் ஜனுதிபதியான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு இந்த ஆசையை வெளியிட்டார்.

யாரிடம்? எப்போது?

கடந்த மாதம் ஜப்பான் மன்னர் ஹிரோஹிட்டோவின் மரணச் சடங்கில் இலங்கை அரசின் பிரதிநிதியாக திரு. ஜெயவர்த்தனு கலந்து கொள்ளச் செல்வதற்குச் சில தினங்களுக்கு முன்னர், தற்போதைய ஜனுதிபதி ரணசிங்கா பிரேமதாஸ அவருக்கு மதிய போசன விருந்து ஒன்றை அளித்தார்.

அப்போதே திடீரென "நான் நாடாளுமன்ற உறுப்பினராக வரவிரும்புகிறேன்" என்ருர் ஜே. ஆர்.

திரு பிரேமதாஸ ஒரு கணம் திடுக்கிட்டார்.

"நீங்கள் அரசியலில் இருந்து ஓய்வு பெற்று விட்டீர்கள்; நாடாளுமன்றத்துக்கு மீண்டும் வர அக்கறையில்லாதவர் என்று அல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்"— இப்படி திரு. பிரேமதாஸ சொன்ஞர்.

25 ஆண்டுகளுக்கு மேலாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர் திரு. ஜெயவர்த்தனு—

"நாடாளுமன்றத்தில்நான் பின்வரிசை உறுப்பினராக இருக்க விரும்புகிறேன்"— என்று கூறிய திரு. ஜெயவர்த்தனு அதற்கான காரணத்தையும் வெளியிட்டார்.

புதிய நாடாளுமன்றத்தில் இடம் பெறும் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கப்போகிறவர்கள் சுவாரஸ்யமிக்க பிரமுகர்கள் அல்லவா?— இது தான் ஜே. ஆர். கூறிய காரணம்.

82 வயதாகியும் அவரை நாடாளுமன்ற ஆசை விடவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டது புதிய நாடாளுமன்றம்.

எண்ணிக்கையில் மட்டுமல்ல திறமையிலும் பலமான எதிர்க்கட்சி ஒன்றை அரசாங்கக் கட்சி புதிய நாடாளுமன்றத்தில் சந்திக்கவேண்டியுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தில் [illegible] எதிர்க்கட்சி எம். பிக்களும் இருப்பர்.

இதனுல் அரசாங்கக் கட்சி எம். பிக்களை ஒழுங்காகச் சமுகமளிக்கவைக்கும் பொறுப்பை ஏற்றுள்ள அரசுக் கொரடா (Chief government whip) மிகவும் கவனமாகச் செயற்படவேண்டியிருக்கும்.

அதிகமான அரசு எம். பிக்கள் முக்கிய சந்தர்ப்பங்களில் வெளிநாடுகள் சென்றுவிட்டாலோ அல்லது நாடாளுமன்றத்திற்கு வர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டாலோ முக்கிய பிரேரணைகளில் அரசு தோல்வி காண வேண்டிய நிலை ஏற்பட்டுவிடலாம்.

**எல்லாம் 9!**

1989 ஆம் ஆண்டின் கூட்டு எண் 9.
9 இன் பெருமை 1989 இல் தெரியும் என்பது எண்சோதிட ஆருடம்.
இன்று 9 ஆம் திகதி 9 ஆவது நாடாளுமன்றம் ஆரம்பமாகிறது.
எம்பிக்களின் எண்ணிக்கை 225 – கூட்டினுல் அதுவும் 9 தான்.
எல்லாமே 9.

அரசுக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 25 என்பதே இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம்.

அரசு எம். பிக்களில் 13 பேர் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து வாக்களித்துவிட்டாலும் போதும், அரசு தோல்வி காண,

ஜனுதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் தோல்வி கண்டது சுதந்திரக் கட்சி.

ஆனுல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் 67 ஆசனங்கள் அக்கட்சிக்குக் கிடைத்த விரக்தியிலும் வெற்றி மனப்பான்மையை உருவாக்க உதவியிருக்கிறது என்று சொல்லலாம்,

### நிழல் அமைச்சரவை

அமைச்சரவையை அமைக்க உதவாவிட்டாலும் நிழல் அமைச்சரவை ஒன்றை அமைத்து, ஆட்சியில் இருப்பவர்களை ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை உதவியிருக்கிறது அல்லவா! ஆளுங் கட்சியின் அமைச்சரவை அனைவரும் அறிந்ததே.

ஆனுல் சுதந்திரக்கட்கியின் நிழல் அமைச்சரமை (Shadow Cabinet) பற்றிப் பலருக்குத் தெரிந்திருக்காது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றச் சம்பிரதாயத்தைப் பின்பற்றி முதல் தடவையாக நமது நாட்டில் 'நிழல் அமைச்சரவை' வந்திருக்கிறது

ஐ. தே. க. அமைச்சரவையைப் பயமுறுத்தும் நிழலாக இது அமையப்போகிறது என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

சுதந்திரக் கட்சியின் நிழல் அமைச்சரவை வருமாறு:

அனுரா பண்டாரநாயக்கா —வெளியுறவு.

கேர்ணல் அநுருத்த ரத்வத்தை — பாதுகாப்பு.

அனில் முனசிங்கா–போக்குவரத்து அமைச்சு.

டாக்டர் மெர்வின் டி சில்வா-திட்டமிடல் அமைச்சு

திரு டபிள்யூ. ராஜரத்தினம் (முன்னுள் உயர் நீதிமன்ற நீதியரசர்) நீதி அமைச்சு

திரு. ஸ்டான்லி திலகரத்ன- நாடாளுமன்ற விவகாரம்

திரு. மைத்ரிபால சேனநாயக்கா - எரிபொருள், மின்சக்தி

லக்ஷ்மன் ஜெயக்கொடி கைத்தொழில் அமைச்சு

சி. வி. குணரத்தின – வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு

திரு. மகிந்த விஜேசேகரா – கடற்றெழில்

டாக்டர் நெவில் பெர்னுண்டோ – சுகாதார அமைச்சு.

**தீபன் ராஜா**

### இந்தியத் தமிழர் பிரதிநிதித்துவம்

புதிய நாடாளுமன்றத்தில் இந்தியத் தமிழருக்குத் தான் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது.

நாட்டின் சனத்தொகையில் 5 சத வீதம் இந்தியத் தமிழர். அவர்களுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவப்படி 12 ஆசனங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனுல் கிடைத்ததோ 3. அதுவும் எப்படி? தேர்தல் மூலம் ஒன்று தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டவர்கள் இரண்டு.

இக்குறையை நீக்க இனவிகிதாசாரப்படி புதிய நாடாளுமன்றத்தில் இடம் பெறச் செய்யுமாறு கோரி அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு கடிதம் எழுதும்படி தேர்தல் ஆணையாளரை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ. அஸீஸ் கேட்டிருக்கிருர்.

முஸ்லிம் வாக்குகளும் பிரிந்து போனதால் முஸ்லிம் பிரதிநிதித்துவமும் எதிர்பார்த்த அளவு இல்லை என்று சில முஸ்லிம் வட்டாரங்கள் முறைப்படுகின்றன.

நிறைகள், குறைகள் கொண்டதாகக் கூறப்படும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்படும் புதிய நாடாளுமன்றம் இன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்படுகிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவிற்கு செல்லும் அகதிகளுக்கு அமெரிக்காவில் தற்காலிக புகலிடம்

கனடா ஒன்ராறியோவிலிருந்து எஸ். பாலச்சந்திரன்

ரொறொன்ரோ, மார்ச் 9

கனடாவுக்கு செல்ல விரும்பும் அகதிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து தற்காலிக புகலிடம் அளிக்கும் என்று கனேடிய குடிவரவு இலாகாப் பேச்சாளர் ஒருவர் அண்மையில் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு ஊடாக கனடாவுக்கு செல்ல விரும்பும் அகதிகள்கனடாவில்விசாரணைகள் ஆரம்பிக்கும் வரை அமெரிக்காவில் காத்திருக்க வேண்டும் என்பது 1987 முதல் நியதியாக இருக்கிறது.

கடல் மூலம் அல்லது விமானம் மூலம் கனடா எல்லைக்கு வந்த மற்றவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்வரை அவர்கள்அங்கே தங்கி இருக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

இத்தகைய நூற்றுக்கணக்கானோர். தற்போது ஆலயங்களிலும் தற்காலிக குடியிருப்புகளிலும் தனியார் இல்லங்களிலும் தங்கி இருக்கின்றார்கள்.

1987 முதல் கனேடிய எல்லையில் 3,000 அகதிகள் அனுமதி மறுக்கப்பட்டு திரும்பி அனுப்பப்பட்டார்கள் என அறிய வருகின்றது.

விண்ணப்பம் செய்த 2 வார காலத்துக்குள் அகதிகளின் கோரிக்கைகளைக் கவனிக்கத் தற்போது ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என கனேடிய குடிவரவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

வீடமைப்பு

## கடன் செலுத்தாதவர்களின் உணவு முத்திரை பறிபோகலாம்

மானிப்பாய், மார்ச். 09

''ஐக்கிய நாணய சங்கத்திலிருந்து தேசிய வீடமைப்புக்கடன் பெற்றவர்கள் தமது கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தத் தவறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களின் உணவு முத்திரைகள் பறிக்கப்படலாம்''.

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கக் கூட்டத்தில் உரையாற்றும்போது சங்கத் தலைவர் திரு. இ. வல்லிபுரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வல்லிபுரம் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது 'தேசிய அபிவிருத்திக் கடன், வீடமைப்புக்கடன் பெற்றவர்கள் பலர் கடன் பணத்தைக் கட்டாத நிலையிலும்கூட நாம் சங்க ரீதியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமல் இருந்துள்ளோம்.

கடன்தொகையைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் பெயர் விவரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு உதவி அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

எனவே பணம் கட்டத் தவறுபவர்களின் பெயர்களை அங்கு நாம் அனுப்பும் பட்சத்தில் அவர்களின் உணவு முத்திரை பறிக்கப்படலாம்.

சங்க உறுப்பினர்கள் கடன் பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது, நாணயமாகவும், ஐக்கியமாகவும் வாழப்பழக வேண்டும்'',

இவ்வாறு அவர் கூறினார். (ச- 90)

### சிறுவர் இல்ல கொடி நாள்

சாவகச்சேரி, மார்ச் 9

கைதடி சைவச் சிறுவர் இல்ல 14 வது கொடித்தினம் நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற உள்ளது.

தலைவர் திரு. கே. வி. முத்துக்குமாரசாமி தலைமையில் ஆரம்பமாகும் இவ்விழாவில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா ஆசிஉரை வழங்குவார்.

'ஓம்' உதவியாளர் திரு. கே. ஆனந்தகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள, முதற்கொடியை கைதடி கொத்தணி அதிபர் திரு. கே. கணேசலிங்கம் விற்பனை செய்வார். (க-31)

### சின்னப் பூவரசம்குளம் வெற்றி

நெடுங்கேணி, மார்ச். 9

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நெடுங்கேணி குளவிசுட்டான் செல்வா விளையாட்டுக் கழகத்தினரால் கழகத்தலைவர் அமரர் திரு. செ. செல்வராசாவின் ஓராண்டு மறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் சின்னப்பூவரசம்குளம் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

நெடுங்கேணி சிவாநகர் என். சீ. விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது. (இ- 108)

### வரியிறுப்பாளர் சங்கக் கூட்டம்

சுன்னாகம், மார்ச். 9

சுன்னாகம் வரியிறுப்பாளர் சங்க விசேஷ பொதுக்கூட்டம் 11 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. இ. இளையதம்பி தலைமையில் நடைபெறும்.

சுன்னாகம் ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள மக்களின் சுகாதரம், வரி, மின்சார சீர்கேடுகள், வீதி திருத்தமும் பராமரிப்பில் உள்ள குறைபாடுகள் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன என்று தலைவர் திரு. இ. இளையதம்பி உதயனிடம் தெரிவித்தார். (இ - 27)

### ரெப்பாளு அதிகாரி சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 9

அம்பலாந்தோட்டை பொலீஸ் பகுதியில் ரிடியாகம என்னுமிடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் ரெப்பாளு அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வீரக்கெட்டியாவில் பெலியத்தை பகுதிகளில் மூன்று பேர் சுட்டுக் கொல்லட்பட்டனர். பின்னர் அவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டன.

அனுராதபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொலீஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார். (உ-எ)

### ஜெய்ப்பூர் அவயவ சங்க கூட்டம்

ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர் சங்கத்தின் யாழ் கிளை அங்கத்தவர்களின் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பொருளாதார உதவிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்படும். (க)

சபை முதல்வர் பதவி மாற்றப்பட்டது

## பிரதமரை பலவீனப்படுத்தும் திட்டம் என்கிறது பி. பி. சி.

இதுவரை பிரதமரே நாடாளுமன்றத்தில் சபை முதல்வராக பணி புரிந்து வந்தார்.

இப்போது பிரதமரிடமிருந்து சபை முதல்வர் பதவி அகற்றப்பட்டு விட்டது.

சபை முதல்வராக தனி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆண்டு தோறும் புதிய பிரதமர் என்ற நடைமுறையைக் கொண்டு வந்ததன் மூலம் பிரதமர் பதவியை பலவீனப் படுத்தி தனது நிலையை ஜனதிபதி பலப்படுத்தி இருக்கிறார் என்று பி. பி. சி யின் கொழும்புச் செய்தியாளர் அறிவித்திருக்கிறார். (இ-எ)

## தேர்தல் ஆணையாளருக்கு ஐ. தொ. காவின் கடிதம்

கொழும்பு, மார்ச் 9

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனப். அப்துல் அஸீஸ் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

தேசிய சனத்தொகையில் காணப்படும் இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப சிறுபான்மைச் சமூகங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறுவதை அரசியல் யாப்பின் 99 ஏ ஷரத்து உறுதி செய்கிறது.

அது சரிவரக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் அந்த ஷரத்தின் கீழ் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது.

அந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற நீங்கள் தவறிவிட்டீர்கள்.

நாட்டின் சனத்தொகையில் 5 சதவீதமானோர் இந்தியத் தமிழர். அவர்களுக்கு 12 இடங்கள் நாடாளுமன்றத்தில் கிடைக்க வேண்டும்.

ஆனால் மாவட்ட அடிப்படையிலும் 3 இடங்கள் மட்டுமே நாடாளுமன்றத்தில் கிடைத்து உள்ளன.

ஆகவே சிறுபான்மையினர் மற்றும் இனவிகிதாசார அடிப்படையிலான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு நீங்கள் கடிதம் எழுதுங்கள்—

இப்படி ஜனப் அஸீஸ் தேர்தல் ஆணையாளரைக் கேட்டிருக்கிறார். (எ)

## ஜெய்ப்பூர் சங்க அங்கத்தவருக்கு சுயதொழில் வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச்9

ஜெய்ப்பூர்செயற்கை அவயவ பாவனையாளர் சங்க அங்கத்தவர்கள் சுயதொழில் செய்து தம் வாழ்க்கையை நடத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் நிர்வாகக்குழு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ள வெளிநாட்டு நிதி உதவி ஸ்தாபனம் ஒன்று, ஓர் கணிசமான அளவு நிதியை இத்திட்டத்திற்கு வழங்க முன்வந்துள்ளது.

சுயவேலைமுயற்சிக்குநிதிஉதவி நல்க முன்வந்துள்ள இந்த வெளிநாட்டு உதவி ஸ்தாபனத்தின் உதவியை, அங்கத்தவர்களின் விரும்புந் தொழிற்பாடுகளுக்கேற்ப ஒருமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. (இ-5)


NEW SCIENCE ACADEMY
B M. C முன்பாக JAFFNA.

91 A L
Weekend Classes

7-30 — CHEMISTRY — சண்
8-30 — PHYSICS — மணியம்
9-30 — ZOOLOGY — பரந்தாமன்
10-30 — BOTANY — குணசீலன்
ஐங்கரநேசன்
9-30 — 11-30 Pure/App MATHS வெக்டர் பிரேம்நாத்

ஆரம்பம்: 11-03-89
Sat 9.3· a.m
[C-1815]



A. A. T (SRI LANKA)
STAGE II
CLASSES ஆரம்பம்: 15-03-1989
மேலதிக விபரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, st Peters Lane,
Hospital Road, JAFFNA.
[STAGE I வகுப்புக்கள் நடைபெறுகின்றன]
(C/1808)



PERSONAL CLASSES
230, நாவலர் வீதி, இலுப்பையடி,
91 A/L யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 11. 03. 1989

இரசாயனவியல்: திரு. சண்முகசுந்தரம்
17-03-1989 வெள்ளி 2.00 — 3.00
பௌதிகவியல்: திரு. சோதிலிங்கம்
16-03-1989 வியாழக்கிழமை 4.30 — 5.30
தாவரவியல்: திரு. குணசிலன்
15-03-1989 புதன் 3.00 — 4.00
விலங்கியல்: திரு. பரந்தாமன்
15-03-1989 புதன் 4.00 — 5.00
தூய – பிரயோக கணிதம் திரு. வெக்டர் வேலாயுதம்
11-03-1989 சனிக்கிழமை 12.30 — 2.30
(C/1818)



83 ஆம் ஆண்டு விஞ்ஞான மாணவர்கட்கு
பௌதிக வியல் துரித மீட்டல் வகுப்பு
ஆரம்பம்:- 11 - 03 - 1989 --. Sat & Sun 4 - 6 p m
ஆசிரியர்: Mr. மணியம், B.Sc.
3ஆம் குறுத்தெரு, யாழ்ப்பாணம்.
[C-1822]



பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்




S-Lon The No.1 PVC pipe

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகர

S-Lon Lanka (Pvt) Ltd.
487, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 598208 — 93716 - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

**பொருள்:-**

வாள்போல் வெளிப்படையான பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை; ஆனால், உறவினரைப்போல இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.


# உதயன்

இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　தொலைபேசி 24805, 22078
09.03.1989　த.பெ. இல23


# கருணாநிதி கையில் பந்து

அடுத்த புதன்கிழமை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்க இருக்கிறார். அப்போது ஈழத் தமிழர் பிரச்சினை குறித்தும் முக்கியமாகப் பேசப்படும் என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஈழம் வாழ் தமிழ் மக்களின் விவகாரம் ஒரு முடிவில்லாத பிரச்சினையாகத் தொடர்ந்து கொண்டிருப்பது பெரும் துரதிர்ஷ்டமாகும். கடந்த சுமார் முப்பத்தைந்து வருடங்களாக அது தீராப் பிரச்சினையாகவே நீண்டு வருகிறது.

தமிழர்களின் சுதந்திர உணர்வில் எழுச்சிகொண்ட அரசியல் போராட்டங்கள், காலத்துக்குக் காலம் போடப்பட்ட தங்குமடங்களாலும், சலுகை உறுதிகளாலும் உரிய, வேண்டிய, முழுதான தீர்வு இல்லாமலே காலம் நம்மைத் தாண்டிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் தூண்டுதலால், இந்தியாவின் முயற்சியுடன் கொண்டுவரப்பட்ட தீர்வும் (1987 ஒப்பந்தமும்) தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூரணமாக ஈட்டவில்லை என்பதே உண்மை. தமிழர்களுக்கு உரிய உரிமைகளும், பாதுகாப்பும் முற்றாக வழங்கப்படவில்லை என்பதும் சரியான நிலைப்பாடே. இதனை இந்திய உயர் அதிகாரிகள்கூட ஏற்றுக்கொள்கிறார்கள். கிடைத்ததை வைத்துக் கொண்டு மேலும் பெற வேண்டும் என்பதே இந்திய அரசு வட்டாரங்களின் சித்தாந்தமாகவும் உள்ளது.

எது எப்படியோ, தமிழர்களுக்கு இன்னும் அமைதி கிடைக்கவில்லை. சரியான ஜனநாயக வாழ்வு திரும்பவில்லை அடிப்படை மனித உரிமைகளை உரியவாறு அனுபவிக்க முடியவில்லை. கொலைகளும், மோதல்களும் தொடர்கின்றன.

இந்த அவலத்தில் இருந்து மீட்சி கிடைக்காதா என்று தமிழர்கள் விசனமுற்றிருக்கிறார்கள். வேதனையுடன் வாழ்கிறார்கள். ஆனால் அதனை நீக்கத் தமது உரிமைகளை விலை பேசவும் அவர்கள் தயாராக இல்லை.

தமிழர்களுக்கு அமைதியும், வேண்டிய உரிமைகளும் கிடைக்க முயற்சிகள், பேச்சுக்கள் நடப்பதாகப் பல தடவைகள் கூறப்பட்டது.

ஆனால் சாதகமான விளைவுகளைத் தான் காண முடியவில்லை.

இப்போதும் பல தரப்பாலும் பலவிதமான பேச்சுக்கள் அமைதி முயற்சிகள் பற்றி எல்லாம் சொல்லப்படுகிறது. கடந்த ஒரு வருடத்துக்கும் மேற்பட்ட காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு சாத்தியமாக, அனுகூலமாக எதுவும் நடக்கும் என்று எதிர்பார்க்கும் நிலையில் மக்கள் இல்லை.

இதனைத் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி கருத்தில் கொண்டு செயலாற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம். தமிழர் அமைப்புகள், இந்திய அரசு, இலங்கை அரசு ஆகிய முக்கோணத் தேற்றம் அடங்கிய தமிழர் பிரச்சினையைத் தமிழர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பதில் திரு. கருணாநிதி எப்படி உந்துசக்தியாகப் பணிபுரிவார், தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியை எந்தளவுக்குக் கொண்டுள்ளார் என்பதை ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்களும் அவதானித்துக் கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஈழத் தமிழர் விவகாரம் என்ற பந்து இப்போது ஓரளவுக்குத் திரு. கருணாநிதி பக்கத்துக்கு எறியப்பட்டது போலத்தான். அவர் இது விடயத்தில் நீண்ட கால அறிவும் தொடர்பும் உடையவர் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

ஈழத் தமிழர் விவகாரம் நெடுகிலும் ஓர் அரசியல் பந்தாக உதைபடக்கூடாது; தமிழர்களின் 'கோலு'க்குள் விழுந்து வெற்றி கிடைக்க வேண்டும்.

# பாடசாலை அதிபர்களிடம் உபகரணங்கள் கையளிப்பு

## ஐ. நா. அ. பு. நிதியம் கொள்முதல்

யாழ்ப்பாணம், மார்ச். 09

முறைசாராக்கல்வி பாடநெறிகளைத் தொடர்வதற்கான உபகரணங்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி திரு. பேர்னட் போயர் செவ்வாயன்று பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

சுமார் 13லட்சம் ரூபா செலவில் இந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

இதற்கான நிதியை ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வழங்கியிருந்தது.

கல்வித் திணைக்கள மண்டபத்தில் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதற்கட்டமாக 25 பாடசாலைகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வைபவத்தில் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன், பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம், திரு. அ. கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-10)

## காரைநகரில் வேலி இழந்தோர்

காரைநகர், மார்ச். 9

காரைநகரில் வேலிகளை இழந்தோர் கிராம சேவையாளர்கள் ஊடாக உதவி அரசாங்க அதிபரிடம் நஷ்டஈடு கோரி உள்ளனர். (இ-73)

# திபெத்தில் இராணுவச் சட்டம்; வெளியுலக தொடர்பு துண்டிப்பு

லாஸா, மார்ச் 8

திபெத்தில் நேற்று நள்ளிரவு முதல் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

தலைநகர் லாஸாவில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

30 ட்ரக்குகளில் சீனப் பொலிஸார் தலைநகரின் பல பகுதிகளில் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

விதிகளில் மக்கள் நடமாடக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

சுதந்திரம் கோரி கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்று திபெத் மாநில அரசு எச்சரித்து உள்ளது.

லாஸாவில் இருந்து வெளிநாட்டவர் அனைவரும் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என்று சீன அரசு நேற்று உத்தரவிட்டது.

சீனாவில் 1960களில் நடந்த கலாசாரப்புரட்சியின் போது ஊரடங்குச்சட்டம் விதிக்கப்பட்டது. அதன் பின்னர் இப்போது தான் முதல் தடவையாக தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் ஒன்றில் ஊரடங்குச்சட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அமைதி நிலவுவதாக சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

திபெத்துடனான தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. (எ)

## ஜப்பானின்
# பங்குமார்க்கட் ஊழல் பிரதி அமைச்சர் கைது

டோக்கியோ, மார்ச். 8

ஜப்பான் அரசாங்கத்தைக் கடந்த சில மாதங்களாக கலக்கியடித்து வரும் பங்குமார்க்கட் ஊழல் சம்பவம் ஒன்று தொடர்பாக நேற்று பிரதிவர்த்தக அமைச்சரை பொலீஸார் கைது செய்தனர்,

இது வரை 12பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஊழல் சம்பவம் தொடர்பாக மூன்று அமைச்சர்கள் அரசில் இருந்து முன்னர் இராஜினாமாச் செய்து விட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பலஸ்தீனத்தில் கடும்சண்டை ஒருவர் பலி; பலர் காயம்

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் பரவலாக பலஸ்தீனியருக்கும் இஸ்ரவேலிய படைகளுக்கும் இடையே கடும் சண்டை நேற்று இடம்பெற்றது.

இஸ்ரவேலிய படைகளின் முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பலஸ்தீன இளைஞர் ஒருவர் மரணமானதைத் தொடர்ந்து, இச்சண்டை ஆரம்பமானது.

இஸ்ரவேலிய உளவுப்படையினரான 'ஷின்பெத்'தே இந்தக் கொலையைச் செய்ததாகக் குற்றம் சாட்டியே பலஸ்தீனியர் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அச்சமயம் இஸ்ரவேலியப் படை சுட்டபோது ஒரு பலஸ்தீனியர் உயிரிழந்தார்.

ஐ.நா. அகதி நிவாரண முகாம் ஒன்றினுள் நுழைந்த இஸ்ரவேலியப் படையினர் அங்கு இருந்தவர்களை தாக்கினர். (எ)

## கெரில்லா தாக்குதல் பற்றி
# அரபாத் மௌனம்சாதிப்பது குறித்து அமெரிக்கா கவலை

லண்டன், மார்ச் 8

லெபனனில் இருந்து பலஸ்தீனக்கெரில்லாக்கள் இஸ்ரவேலுக்குள் ஊடுருவிச்சென்று தாக்குதல் நடத்துவது பற்றி யாஸிர் அரபாத் மௌனஞ் சாதிப்பதுபற்றி அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

பலஸ்தீனக் கெரில்லாக்களை அரபாத் வன்மையாகக் கண்டிக்கத் தொடர்ந்து தவறுவாரானால், வன்செயலைக் கைவிடுவது என்று அரபாத் ஐ.நா. பொதுச் சபையில் நிகழ்த்திய பேச்சுக்கு அர்த்தமில்லாமற் போய்விடும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்திருக்கிறார்.

லெபனனில் இருந்து பலஸ்தீனக் கெரில்லாக்கள் நடத்தியதாகக் கூறப்படும் இரண்டு தாக்குதல்களையும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் இன்னும் கண்டிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மங்கோலியாவில் இருந்து சோவியத் படைகள் வாபஸ்

மாஸ்கோ, மார்ச், 8

மங்கோலியாவில் இருந்து சோவியத் துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோ அரசு நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டது.

மங்கோலியாவில் துருப்புக்களில் முக்காற்பங்கு வாபஸ் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அங்குள்ள விமானப்படை முற்றாக வாபஸ் வாங்கப்படும் என்று சோவியத் யூனியன் அறிவித்தது.

எப்போது படைகள் வாபஸ் வாங்கப்படும் என்பது பற்றியும் அறிவிக்கப்படவில்லை.

மேற்குலக ராணுவ வட்டாரங்களின் படி மங்கோலியாவில் 40 முதல் 60 ஆயிரம் சோவியத் துருப்புக்கள் இருக்கலாம் என்று தெரியவருகிறது.

சீனாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் மங்கோலிய நாடு உள்ளது.

மே மாதம் 15 இல் சோவியத் தலைவர் கோர்பச்சேவ் சீன விஜயத்தை மேற்கொள்கிறார்.

இரு நாடுகளின் உறவுகள் சீராக மங்கோலியப் பிரச்சினையும் தடையாக [illegible] மங்கோலியாவில் இருந்து சோவியத்படைகள் விலகுவது இரு நாடுகளின் உறவு சீராக உதவும் என்று கூறப்படுகின்றது. (எ)

# மந்தகதி நிர்வாகமா? அதிபர் புஷ் மறுப்பு

வாஷிங்டன், மார்ச். 8

அமெரிக்காவின் 41 ஆவது அதிபராக திரு. ஜோர்ஜ் புஷ் பதவி ஏற்று 6 வாரங்கள் முடிவடைந்து விட்டன.

அவரின் நிர்வாகத்தில் வேகம் காணப்படவில்லை; மந்தகதியில்தான் அரசு இயந்திரம் செயல்படுகிறது என்று குற்றச்சாட்டுக்கள் வெளிவந்திருக்கின்றன.

இந்த நிலையில் அதிபர் புஷ் செய்தியாளர் மாநாடுஒன்றை நேற்று நடத்தினர்.

அப்போது 'மந்த கதியில் நிர்வாகம்' என்ற குற்றச் சாட்டை நிராகரித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இன்னும் 45 நாட்களில் வெளியுறவுக் கொள்கையில் இடம்பெறவுள்ள முக்கிய அம்சங்களை வெளியிடுவேன்.

இப்படி திரு. புஷ் சொன்னார். (எ)

# ராஜீவுக்கு ஹெக்டே சவால்

பெங்களூர், மார்ச் 8

எனக்கு வெளிநாட்டு வங்கியில் பணம் இருப்பதை நிரூபிக்க என்மீது வழக்குத் தொடர பிரதமர் ராஜீவ் காந்தி தயாரா?

கர்நாடக மாநில முன்னாள் முதல் அமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே இப்படி சவால் விட்டார்.. (எ)

# ராஜீவ் திறமையற்றவர்; வி.பி.சிங் கண்டனம்

கல்கத்தா, மார்ச் 8

காங்கிரஸ் கட்சி உயிர் இல்லாத உடல் ஆகிவிட்டது. அதைத் தகனம் செய்ய வேண்டும்.

ஜனதா தளம்தலைவர் திரு. வி. பி. சிங் இதனைத்தெரிவித்தார். பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:

திறமையற்றவர் என்பதை பிரதமர் ராஜீவ் காந்தி நிரூபித்து விட்டார். அவர் பிரதமராக நீடிப்பது நாட்டுக்கு ஆபத்து.

காங்கிரஸைத் தோற்கடிக்க வேண்டும் என்பது தற்போதைய கட்டாயம்.

ஹிட்லரைத் தோற்கடிக்க ரூஸ்வெல்டும் ஸ்டாலினும் ஒன்று சேர்ந்தனர். அது போல ராஜீவை தோற்சடிக்க எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டும்—

இப்படி .திரு. வி. பி. சிங் சொன்னார் (எ)

## அ. தி. மு. க ஆட்சி மீது
# ஊழல் விசாரணை இல்லை; ஊழியர் மீது நடவடிக்கை
## கருணாநிதி அறிவிப்பு

திருச்சி, மார்ச். 08

அ. தி. மு. க ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் சம்பவங்களை விசாரிக்க கமிஷன் எதுவும் அமைக்கப்படமாட்டாது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

ஆனால் அப்படியான ஊழல் சம்பவங்கள் நடைபெற ஒத்துழைத்த அரசு அதிகாரிகள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

அ. தி. மு. க அரசில் இடம்பெற்ற ஊழல்கள் பற்றி விசாரிக்க கமிஷன் அமைக்க வேண்டும் என்று தி. மு. க. எம்.எல் ஏக்கள் வற்புறுத்தி வந்தனர் என்பது தெரிந்ததே. (எ)

# கம்யூனிஸ்ட் நாடுகள் அமெரிக்காவுடன் உறவு

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளான ஹங்கேரியும் போலந்தும் அமெரிக்காவுடன் நெருங்கிய ராஜதந்திர உறவை வைத்துக் கொள்ளப்போவதாக அறிவித்துஉள்ளன.

வார்ஸோ அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்த இரண்டு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் அமெரிக்க வெளியுற [illegible] ஜேம்ஸ் பேக்கரைச் சந்தித்து தங்களின் இந்த விருப்பத்தை வெளியிட்டனர்.

ஹங்கேரிக்கும் போலந்துக்கும் விஜயஞ்செய்யும்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சரை, இரண்டு அமைச்சர்களும் கேட்டுக்கொண்டனர். அமெரிக்க அதிபர் புஷ்சுக்கும் இரண்டு நாடுகளும் அழைப்புவிடுத்துள்ளன. (எ)

## யோர்க்ஷயரில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு:
# பிரதமர் தாட்சரைக் கொல்ல ஐரிஷ் விடுதலை இராணுவம் சதி?

லண்டன், மார்ச் 8

பிரிட்டனில் வடக்கு யோர்க்ஷயர் வீடு ஒன்றில் இருந்து பெருந்தொகையான வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களை ஸ்கொட்லாந்து பொலிஸின் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு கைப்பற்றியது.

கைப்பற்றப்பட்ட இடத்துக்கு அருகில் உள்ள இடத்தில் அடுத்தவாரம் பிரதமர் மார்க்கிரட் தாட்சர் தலைமையில் கன்சர்வேட்டிவ் கட்சி மாநாடு நடைபெற விருக்கிறது.



அந்த மாநாடு நடக்கும் சமயம் தலைவர்களைக் கொல்லும் திட்டத்தின் ஒரு பகுதியாக இப்பயங்கர ஆயுதங்கள் ஐரிஷ் விடுதலை இராணுவத் தீவிரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அடுத்த வாரம் நடத்தப்பட உள்ள கன்சர்வேட்டிவ் மாநாடு ரத்துச் செய்யப்படுமா? என்று கேள்வி எழுந்துள்ளது:

மாநாடு ரத்துச் செய்யப்படமாட்டாது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# நடிகை ராணிபத்மினி கொலை வழக்கு

செங்கல்பட்டு, மார்ச். 8

நடிகை ராணிபத்மினி கொலை வழக்கு இப்பொழுது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

நடிகை ராணிபத்மினி, அவரது தாயார்இந்திரா ஆகியோரைக் கொலை செய்ததாக மூவர் மீது இவ் வழக்கில் குற்[illegible] (எ)

# மங்களூர் ரயிலில் வெடிகுண்டு இறுதி நேரத்தில் கண்டுபிடிப்பு

சென்னை, மார்ச். 8

சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் கடந்த 27 ஆம் திகதி புறப்படத் தயாராக இருந்த மங்களூர் ரயிலில் பயங்கர வெடிகுண்டு ஒன்று குளியலறையில் இருந்து கண்டு எடுக்கப்பட்டது.

27 - 2 - 89 இரவு 7.05 மணிக்கு சென்னை நகர கமிஷனர் அலுவலகத்தில் உள்ள பொலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு மர்ம டெலிபோன் வந்தது.

'சென்றல் ரயில் நிலையத்தில் இரவு 7.10 மணிக்கு புறப்படத் தயாராக இருக்கும் மங்களூர் மெயில் ரயிலில்வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது' - என்று போனில் பேசியவர் கூறிவிட்டு போனை வைத்து விட்டார்.

ரயில் புறப்பட ஐந்து நிமிட நேரமே இருந்தது. பொலீஸார் அவசரம் அவசரமாக ரயிலில் இருந்து பயணிகளை இறக்கி விட்டு சோதனையை ஆரம்பித்தனர்.

'மெட்டல் டிரெக்டெர்' கருவிமூலமும் பொலீஸ் நாய் மூலமும் ஒவ்வொரு பெட்டியாக சோதனையிடப்பட்டது.

அப்போது என்ஜினை ஒட்டியிருந்த முதல் பெட்டி குளியலறையில் 'டைம் பொம்' இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் 2 வயர் பொருத்தப்பட்டு மின்சார சுவிச் போர்ட்டில்சரியாகஇணைக்கப்படாமல் வைத்து இருப்பது தெரியவந்தது.

அந்த வெடிகுண்டுவெடித்து இருந்தால் பயங்கர விபத்து ஏற்பட்டு ஏராளமான உயிர்ச்சேதம் நிகழ்ந்திருக்கும் என்று கூறப்பட்டது. (எ)

# 101 வயதில் பல்முளைக்கும் அதிசயம்

பீகிங், மார்ச். 8

சீனாவைச் சேர்ந்தவர் மொயாங்ஹுன் வயது 101.

இவருக்கு இன்னும் பற்கள் வலுவாக உள்ளன.

எந்த பொருளையும் எளிதில் கடித்துச் சாப்பிடுகிறார்.

இன்னொரு அதிசயம் என்னவென்றால், இந்த வயதிலும் அவருக்கு கடவாய்ப்பல் முளைப்பது தான்.

அவரது பல் வலிமை பற்றி மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்தது. (எ)

# 90 ஆயிரம் கெரில்லாக்கள்

நைரோபி, மார்ச் 8

மத்திய ஆபிரிக்கக் குடியரசு என்று அழைக்கப்படும் நாட்டில் 'கெரில்லா' என்ற மனிதக் குரங்குகள் அதிக அளவில் உள்ளன.

அங்கு ஒருலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனிதக் குரங்குகள் வசிப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர் றிச்சர்ட் கரோல் கூறியிருக்கிறார்.

இவற்றைப் பாதுகாக்க வனவிலங்கு சரணாலயம் ஒன்றை அமைக்கும்படி மத்திய ஆபிரிக்க அரசை நிபுணர் வற்புறுத்தியுள்ளார். (எ)

# 1ஆவது பிறந்த நாளைக் காணாத குழந்தைகள்

புதுடில்லி, மார்ச் 8

இந்தியாவில் குழந்தைகள் இறப்பு அதிகரித்து உள்ளது.

ஆயிரத்துக்கு நூறு குழந்தைகள் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு முன்பே உயிரிழக்கின்றன.

பிறக்கும் குழந்தைகளில் பாதி பிறந்த முதல் மாதத்திலேயே இறந்துவிடுகின்றன.

மேற்கு நாடுகளில் குழந்தைகளின் இறப்பு 1,000க்கு 20 ஆக உள்ளது. (எ)

# பாகிஸ்தான் மீது காபூல் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத், மார்ச் 8

ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் இன்னமும் ஆயுதங்களை வழங்கி வருவதாக காபூல் அரசு குற்றஞ் சாட்டி உள்ளது.

பாகிஸ்தானில் இருந்து சுமார் 200 கெரில்லாக்கள் கிழக்குப் பகுதி ஊடாக ஆப்கனுக்குள் நுழைந்துள்ளனர் என்றுகாபூல் அரசு வானொலி அறிவித்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, : யாழ்ப்பாணம்

# உதயன்

09 - 03 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## திலகரத்ன பதவியேற்பார்

கொழும்பு, மார்ச் 9
இலங்கை வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக திரு. பெர்னுட் திலகரத்ன அடுத்தவாரம் பதவி ஏற்கிறுர்.

புதுடில்லியில் இலங்கை தூதராக பணியாற்றிய இவர் இலங்கை திரும்பும் முன்னர் பிரதமர் ராஜீவ், ஜனுதிபதி வெங்கடராமன், உபஜனுதிபதி சங்கர் தயாள் சர்மா, வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்து பேசினுர். (எ)

## இலங்கை வங்கியில் வெள்ளி, சனி மட்டுமே நிவாரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ் மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகள் யாவும் வெள்ளிக்கிழமை திறந்திருக்கும்.

இந்த வாரம் முதல் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் மட்டுமே மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும்.

முன்னர் போல ஞாயிற்றுக்கிழமைகளில் இக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. (ஓ-10)

## 19 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்

கிளிநொச்சி, மார்ச் 9
கிளிநொச்சி கல்வி மாவட்டத்திற்கு புதிதாக 19 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டன.

ஒரு சிலர் நகரப்புறப் பாடசாலைகளுக்கும் ஏனையோர் பின்தங்கிய பிரதேசங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (ஓ-ரி)

## அமைச்சரின் மைத்துனர் கொலை!

கொழும்பு, மார்ச் 9
விவசாயத்துறை இணை அமைச்சர் விஜரத்தின பண்டாவின் மைத்துனரான கிராமசேவையாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினுல் மாத்தளை, வில்கமுவ என்னும் இடத்தில் வைத்து கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## செய்திச் சாரம்

## கொமேனியை குறை கூறுகிறுர் ஈராக் ஜனுதிபதி

பக்தாத், மார்ச் 9
எழுத்தாளர் ருஷ்டிக்கு ஈரான் அதிபர் கொமேனி மரணதண்டனை விதித்ததை ஈராக் ஜனுதிபதி சதாம் ஹுசேன் குறை கூறினுர்.

இந்த மரண தண்டனை உத்தரவினுல், ருஷ்டியிலும் பார்க்க இஸ்லாமுக்குத்தான் அதிக தீமை ஏற்பட்டுள்ளது என்று ஈராக் அதிபர் சொன்னுர். (எ)

## குண்டுச் சத்தம்

அரியாலை, மார்ச் 9
கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் நேற்று குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

இது குறித்து ஏற்கனவே அமைதிப் படையினர் அறிவித்திருந்தார். இப்பகுதி மக்கள் பதற்றம் அடையவில்லை.

குண்டுகள் செயலிழக்கச் செய்ததும், இராணுவப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டதுமே இந்தச் சத்தங்களுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ரி)

## வேட்டுச் சத்தம்; மக்கள் பதற்றம்

கொக்குவில், மார்ச் 9
கடந்த செவ்வாய்க்கிழமை பொற்பதி வீதிப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இதனுல் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் இரவை புனித சின்னப்பர் ஆலயத்தில் கழித்தனர். )ஓ-69)

## சட்டத்தரணி வெட்டிக் கொலை!

கொழும்பு, மார்ச் 9
ஹோமகம என்னும் இடத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பத்மலால் மஹிந்தவெத்தசிங்க இனந்தெரியாத நபர்களினுல் வாட்களினுல் வெட்டிக்கொல்லப்பட்டார் .(உ-எ)

யாழ், கோப்பாய், நல்லூர் பிரிவுகளுக்கு

# ஆஸ்பத்திரி வீதி வங்கிக் கிளையில்

## வெள்ளியன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கைவங்கிக் கிளையில் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 295 குடும்பங்கள் நிவாரணம்பெற இருக்கின்றன.

நிவாரணம் பெறவுள்ள பகுதிகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:—

**யாழ்ப்பாணம் உ அ அ பிரிவு**

★ கொழும்புத்துறை— 60
★ ஈச்சமோட்டை — 53
★ குருநகர் கிழக்கு— 159
★ குருநகர் மேற்கு —111
★ யாழ்நகரம் — 72
★ பெரியகடை — 42
★ நாவாந்துறை — 38

**நல்லூர் உ. அ. அ. பிரிவு**

★ நல்லூர் தெற்கு — 124

**கோப்பாய் உ அ. அ. பிரிவு**

★ பத்தைமேனி — 28
★ இடைக்காடு — 41
★ அச்சுவேலி வடக்கு—84
★ அச்சுவேலி தெற்கு—49
★ புத்தூர் கிழக்கு — 15
★ வாதரவத்தை — 05
★ புத்தூர் மேற்கு — 58
★ ஆவரங்கால் — 36
★ சிறுப்பிட்டி — 113
★ அச்செழு — 298
★ ஊரெழு — 52
★ உரும்பராய்கிழக்கு—35
★ உரும்பராய் மேற்கு—63
★ கோப்பாய் வடக்கு—96
★ கோப்பாய் தெற்கு—25
★ இருபாலை — 105

(ஓ-10)

## சிமெந்து விநியோகம்: தனியார் துறைக்கு இல்லை!

கொழும்பு, மார்ச் 9
சிமெந்து விநியோகத்தை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கட்டடப்பொருள் கூட்டுத்தாபன விற்பனை நிலையங்கள் மூலம் மேற்கொள்ள இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

சிமெந்து விற்பனை முகவர்களாக தனியார் துறையில் நியமிக்கப்பட்ட 1300 பேரையும் நிறுத்துவது என்றும் கூட்டுத்தாபனம் முடிவு செய்தது.

தனியார் துறைக்கு வழங்கப்படும் சிமெந்து நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக வந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே, கூட்டுத்தாபனம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## யாழ் நகரில் வீதிகள் மீண்டும் திருத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 9
நீண்ட காலத்தின் பின்னர் யாழ் மாநகர சபை வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த திருத்த வேலைகளுக்கு சுமார் 90 இலட்சம் ரூபா செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைகளை துரிதகதியில் செய்து முடிப்பதற்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் நடவடிக்கை எடுத்து வருகிறுர்.

சிவன் பண்ணை வீதி, ஆஸ்பத்திரி வீதி, பாங்ஷால் வீதி, மடத்தடி வீதி, ராசாவின் தோட்ட வீதி, கஸ்தூரியார் வீதி உட்பட இருபது வீதிகள் முதற்கட்டமாக திருத்தி அமைக்கப்படவுள்ளன. (உ-5)

## முன்னுள் நீதி அமைச்சர் விளக்க மறியலில்!

கொழும்பு, மார்ச் 9
சுதந்திரக் கட்சி அரசில் நீதி அமைச்சராகப் பணியாற்றிய திரு. இரத்தினசிறி விக்ரமநாயக்காவை வருகிற 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி ஹோமகம நீதிவான் திருமதி சந்திரிகா ஹெகொட உத்தரவிட்டார்.

பாதுக்க என்ற இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டார். (உ-எ)

## 15 ஆம் திகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
7-3-89இல் செயல்படத் தொடங்கிய விசேட பிரிவு நேற்றுவரை சுமார் 1,783 சான்றிதழ்களை விண்ணப்பதாரர்களுக்கு தபாலில் அனுப்பி உள்ளது. மேலும் விண்ணப்பங்கள் யாவும் குடாநாட்டில் உள்ள 40 பிறப்பு இறப்பு பதிவாளர் பிரிவு அடிப்படையிலும் 11 உதவி அரசாங்கஅதிபர்பிரிவுகளுள்ள திருமணப் பதிவாளர் பிரிவு அடிப்படையிலும் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. —

நல்ல நிலையில் உள்ள பதிவுகளை போட்டோஸ்ரற் செய்து பிரதிகள் வழங்கவும் ஏனையவற்றைக் கையால் எழுதி பிரதிகள் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. —

1987ஆம், 1988ஆம் ஆண்டுகளிலும் 1989 ஜனவரி, பெப்ரவரி மாதங்களிலும் விண்ணப்பித்து இன்னமும் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்களின் விண்ணப்பங்கள் தற்போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சான்றுப்பத்திரங்கள் இன்னும் சில தினங்களில் அவர்களின் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட உள்ளன. — என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

## மேற்கிந்தியா வென்றது

பார்படோஸ், மார்ச் 9
பார்படோஸில் இந்திய—மேற்கிந்திய அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் மேற்கிந்திய அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 48 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி 48 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 198 ஓட்டங்களைப் பெற்றது. (உ)

## ஜலலபாத்தை கைப்பற்றசண்டை

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களில் ஒன்றுன ஜலலபாத்தைக் கைப்பற்றுவதற்கான சண்டையை கெரில்லாக்கள் நேற்று ஆரம்பித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கெரில்லாக்களின் இடைக்கால அரசின் தலைமையகத்தை ஜலலபாத்தில் அமைப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே இச்சண்டை இடம்பெறுவதாக செய்திகள் தெரிவித்தன. (ஓ-எ)

## காபூலில் பதற்றம்

காபூல் விமான நிலையம் மூடப்பட்டது.

காபூல் விமான நிலையத்தைச் சுற்றியும் கெரில்லாக்கள் தாக்குதலை ஆரம்பித்தனர் என்று கடைசியாக வந்த செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## விபத்தில் மாது காயம்

வல்வெட்டித்துறை, மார்ச் 9
இராணுவ வண்டி ஒன்றுடன் மோதுண்ட வயோதிப மாது ஒருவர் காயமுற்றுர். அப்பெண்ணுக்குக் காலில் சத்திர சிகிச்சைசெய்யப்பட்டது

இந்த விபத்துச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணியளவில் பருத்தித்துறை மீன் சந்தை அருகே இடம்பெற்றது.

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த இராசம்மா வேலுப்பிள்ளை (வயது 60) என்ற பெண்ணே காயமடைந்தவராவார். (உ-160)

## யோகேஸ் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, மார்ச் 9
யாழ்ப்பாணம் முன்னுள் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன்நோய்வாய்ப்பட்டுகொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரின் இருதயம் பலவினம் அடைந்திருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறின.

## தமிழ்ப்பகுதி...

ஈ. பி. ஆர். எல். எவ் வைச் சேர்ந்த திரு. க. பிரேமச்சந்திரன் —

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஜனுப். அஷ்ரப், ஜனுப். ஷெய்குதீன் ஆகியோரும் ஜனுதிபதியை நேற்றுச் சந்தித்துப் பேசினுர்கள்.

## ஸ்ரான்லி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேந்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இவர் சில ஆய்வு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

நேற்றும் அவர் கொலிஜ் ஹவுஸில் ஆய்வு வேலைகளில் ஈடுபட்டிருந்த போதே இனந்தெரியாத கோஷ்டியின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர். (ஓ-ஐ)

## பாடசாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சேகரிக்கப்பட வேண்டிய விவரங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்தினுல் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுமார் நூறு பதில் அதிபர்கள் இவ்வாறு நிரந்தர அதிபர்களாக நியமனம் பெறவுள்ளனர். (ஓ-10)

பல்கலைக் கழகங்களில்

## இடநெருக்கடியைத் தவிர்க்க மாகாணக் கல்லூரிகள்

கொழும்பு, மார்ச் 9
மாகாணக் கல்லூரிகளை நிறுவும் உத்தேசதிட்டம் ஒன்றை உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீது தயாரித்து வருகிறுர்.

பல்கலைக் கழகங்களில் ஏற்படும் இடநெருக்கடியை தவிர்க்குமுகமாகவே மாகாணக் கல்லூரிகளை, நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவருக்கு முதல் இரண்டு ஆண்டுகள் மாகாணக் கல்லூரிகளில் கல்வி போதிக்கப்படும்.

கடைசி ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் பல்கலைக் கழகங்களில் அவர்களுக்கு போதிக்கப்படும்.

உத்தேசத் திட்டத்தில் இப்படிக் கூறப்பட்டுள்ளது. (ஓ-எ)

## மரண அறிவித்தல்கள்

### அருள் மனேகரன் இராசநாயகம்

மக்கள் வங்கி உத்தியோகத்தர் (மன்னுர்)

அருள் மனேகரன் இராசநாயகம் காலமானுர். இவர் நல்லூரைச் சேர்ந்த காலம் சென்ற டாக்டர், மற்றும் மேரி இராசநாயகம் தம்பதிகளின் பிரிய மகனும், (உரும்பராய்) மகாலக்ஷ்மியின் அருமைக் கணவரும், மேனகா, சாந்தா, இருவரின் அன்புத் தந்தையும், நவீனு, பவளா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் திருமதி கனகரத்தினம் ஆகியோரின் மருமகனும், ஜோ தேவானந்நந்தகுமாரன், சிவஞானரத்தினம், ஆனந்தரத்தினம், மகேந்திரரத்தினம், சண்முகரத்தினம், பவளலக்சுமி, ஆனந்தலக்சுமி ஆகியோரின் மைத்துனரும், செல்வமலர், சிவசுப்பிரமணியம் இருவரது சகலனுமாவார், உரும்பராய் கைதடி வீதியில் உள்ள அன்னரது இல்லத்தில் இன்று 9-3-89ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் ஆராதனைக்குப் பின் நல்லடக்கத்துக்காக அன்னரது உடல் நல்லூர், தூய யாக்கோப்பு தேவால சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்-

தகவல்:
நவீனு தேவானந்
சகோதரி

(9799)

### திருமதி இரத்தினசபாபதி இராசம்மா

கோண்டாவில் நெட்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி இரத்தினசபாபதி இராசம்மா 07-03-89இல் காலமானுர். இவர் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்தவரும் யாழ். நகரசபையின் முன்னுள் களஞ்சியக் காப்பாளருமான காலஞ்சென்ற திரு. வை. இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், சாந்தநாயகி, புண்ணிய மூர்த்தி (மக்கள் வங்கி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்), சத்தியவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திலிங்கம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் விவசாய விரிவாக்கல் திணைக்களம், கிளிநொச்சி) சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற கட்டடப் பரிசோதசர் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிற்றன்னையும், கணேசபிள்ளை, ரணீந்திரராஜா, குமரேஸ்வரி, அன்னபாக்கியம், ஞானபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னுரின் பூதவுடல் 09-03-89 இன்று காலை 11.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றுர், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. புண்ணியமூர்த்தி

C.M.S. ஒழுங்கை,
கோண்டாவில்.

(9793)

### திரு. கந்தையா விஞசித்தம்பி

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கந்தையா விஞசித்தம்பி 5—3—89 அன்று காலமானுர். இவர் பூரணத்தின் அன்புக் கணவரும், தில்லைநாயகி, பரமேஸ்வரி, யோகராஜா (குவைத்), கனகராஜா (குவைத்), கமலேஸ்வரி (குவைத்), விமலேஸ்வரி (இந்தியா), தங்கராஜா (குவைத்), இராஜேஸ்வரி (கனடா), பாலேஸ்வரி, சுகுணராஜா, ஜெயராஜா, கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மரத்தினம், ஞானலிங்கம், மார்க்கண்டு (குவைத்), சுப்பிரமணியம் (கனடா), ஜெயராசா (கனடா), ராஜேந்திரன் (கனடா), ஜெயலட்சுமி, மதிவதனி ஆகியோரின் மாமனுருமாவார். ஈமக்கிரியைகள் (9-3-89) இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கனக்க மரத்தடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானலிங்கம்
(மருமகன்)

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(9792)

## கண்ணீர் அஞ்சலி

முன்னுள் மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக்கிளை ஊழியரும் தற்பொழுது மன்னுர் கிளையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராக கடமையாற்றியவரும், உரும்பராய் வாசியுமான திரு. அருள் மனேகரன் இராசநாயகம் 07-03-89-இல் காலமானுர். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

ஊழியர்
(9798) யாழ்-பிரதான வீதிக்கிளை மக்கள் வங்கி.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ஏபிரகாம்பிள்ளை புண்ணிய புவிராஜசிங்கி

[மன்னுர் மாவட்ட பாலநிலையப் பொறுப்பதிகாரியும், (D.S.) சத்துரிய மாசபை உறுப்பினரும், லயன்ஸ் கிளப் உறுப்பினரும்.]

தோற்றம் : 06-11-1914
மறைவு : 09-03-1985

எங்கள் அன்புத் தெய்வமே 4 ஆண்டுகள் சென்றுலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் மாருது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேம்.

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

வளர்மதி இல்லம்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

திருமதி சரஸ்வதி
(9969)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 09 - 03 - 1989 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org